பக்கங்கள்: 12 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 26 வெள்ளிக்கிழமை 11.12.2020 கதிர் 36

இறுதிப்போரில் இராணுவத்திடம் அகப்பட்ட ஒரு லட்சத்து 47 ஆயிரம் தமிழர்கள் எங்கே?

சபையில் கேள்வி எழுப்பினார் கஜேந்திரன் எம்.பி.

கொழும்பு, டிசெ.11

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின்போது கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 47 ஆயிரம் தமிழர்கள் இராணுவத்தினரிடம் அகப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது?

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் சபையில் நேற்று கேள்வி எழுப்பினார்.

வரவு – செலவுத் திட்டத்தின் நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான பக்கம் 02 »

இனி இது ரகசியம் அல்ல!

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக ஆளும் தரப்பு எம்.பிக்கள் மட்டத்திலும் சாதகமான சமிக்ஞைகள் இல்லை என்கின்றன கொழும்பு வட்டாரங்கள்.

வரவு – செலவுத் திட்டத்தை ஒட்டி நேற்று நாடாளுமன்றத்தில் சபாநாயகர், பக்கம்02 »

கிழக்கில் தொற்று எண்ணிக்கை - 501

இலங்கையின் கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் 9 மாத குழந்தைக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் டாக்டர் கே.சுகுணன் தெரிவித்தார்.

அவர் மேலும் பக்கம் 02 »

மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் கோட்டா அரசின் பட்ஜட் நிறைவேற்றம்

கூட்டமைப்பும் விக்னேஸ்வரனும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை

கொழும்பு, டிசெம்பர் 11

2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் திருத்தங்களுடன் 97 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் கன்னி வரவு – செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

தொழிநுட்பக் கோளாறு காரணமாக கை உயர்த்தும் அடிப்படையில் வாக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டது.

பக்கம் 02 »

ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பில் மஹிந்த தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!!

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்வது தொடர்பில் ஆராயும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், சுகாதாரத் தரப்பின் பிரதானிகளுக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்ற வளாகத்திலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு சுகாதார நிபுணர்களின் பரிந்துரைக்கமைய நிலத்தடி நீர் மட்டம் பக்கம் 02 »

கொரோனாவுக்கு மேலும் இருவர் பலி

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு மற்றும் வெலிகம பகுதிகளைச் சேர்ந்த இரு பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இதன்படி கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 146 ஆக அதிகரித்துள்ளது. பக்கம் 02 »

541 பேருக்கு நேற்றும் தொற்று

நாட்டில் நேற்றும் 541 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 613 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 22 ஆயிரத்து 261 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 206 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 146 உயிரிழந்துள்ளனர்.

நீதி கோரி கதறும் தாய்

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று காணாமல் ஆக்கப்பட்டோரின் பக்கம் 02 »

அரசியல் கைதிகள் விடுதலை குறித்து கோட்டாவுடன் பேசி விரைவில் முடிவு

பிரதமர் மஹிந்த வாக்குறுதி

கொழும்பு, டிசெ.11

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ள வேண்டுகோள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேரில் பேசி தீர்க்கமான முடிவொன்றை விரைவில் எடுப்போம்.

– இவ்வாறு உறுதியளித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் காலம் தாழ்த்தாது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 15 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகக் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதியுள்ளனர். அந்தக் கடிதம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் பக்கம் 02 »

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

நாடாளுமன்றில் சார்ள்ஸ் எம்.பி. வலியுறுத்து

இறுதிப் போரில் சரணடைந்த போராளிகளை விடுதலை செய்ததைப்போலவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இன்றும் சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் நேற்று வலியுறுத்தினார்.

அவர் மேலும் பக்கம் 02 »

மணமகள் தேவை

1987, யாழிந்து வேளாளர், திருவாதிரை
BANK, சங்கானை
பட்டதாரி
பதிவு இல 3718

31/12/2020 வரை பதிவு கட்டணத்தில் 40% கழிவு
31/12/2020 வரையான பதிவுக்கு தரகர்கூலி இல்லை

Call 076 664 9401 (Whatsapp/Viber)
ஒன்லைன் திருமண சேவை
www.EQMarriageService.com
Ensured Quality Lanka (Pvt) Ltd., Bambalapity, Colombo 04.

Beetel Lanka
Courier Service
Photo Copy/ Calls/ Fax/ Print
Indian Visa Application
021 222 8591 / 077 774 1117
272 K.K.S road. Jaffna
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
DHL FedEx aramex

இந்திய மீனவரின் அத்துமீறலைத் தடுக்க நேரில் களமிறங்கும் முல்லை மீனவர்கள்!

முல்லைத்தீவு, டிசெ.11

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை மீறும் இந்திய மீனவர்களைத் தடுப்பதற்காகத் தாங்களே கடலுக்குள் செல்வதற்கு முல்லைத்தீவு மீனவர்கள் பக்கம் 02 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாலை தேநீர் விருந்துபசாரம் ஒன்றை அளித்தார்.

இதே வரவு – செலவுத் திட்டத்தை ஒட்டி ஆளும் தரப்பு உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்களுக்கு கொழும்பு ஷங்கரில்லா ஹோட்டலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் சில தினங்களுக்கு முன்னர் இரவு நேர விருந்தளித்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இந்த விருந்தில் கலந்து கொண்டார்.

அதில் கலந்து கொண்ட ஆளும் கட்சி எம்.பிக்களிடையே – அவர்கள் அமர்ந்திருந்த மேசை வட்டத்தில் – பெரும்பாலும் பிரதான பேசு பொருளாக இருந்தது இந்த மாகாண சபைத் தேர்தல் விடயம் தானாம்.

இப்போது அரசுக்கு சாதகமான சூழ்நிலை இல்லை. தேர்தலை நடத்துவது சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு வலுவாகக் காலூன்ற வாய்ப்பளித்து விடும் என்ற சாரப்படத்தான் பலரும் தமக்குள் உரையாடிக் கொண்டனர்.

உஷாராகத் தமக்குள் அது பற்றிப் பேசிக் கொள்ளவும், அத்தகைய நிலைமை ஏற்படக் காரணமானவர்களை வையவும் அவர்கள் பின்நிற்கவில்லை. ஆனால் அந்த நிலைமையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கோ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கோ காதில் போடுவதற்கு யாருக்கும் துணிச்சல் இருக்கவில்லை என்றார் அந்த நிகழ்வில் பங்குபற்றிய ஓர் எம்.பி.

இன்னொரு விடயத்தையும் அவர் கூறினார்.

“எல்லாப் பிரதேசங்களிலும் கீழ் மட்டங்களில் மொட்டுக் கட்சியோ, சுதந்திரக் கட்சியோ இன்னும் சரியாகக் கட்டமைக்கப்படவில்லை. ஒரே குழப்பம். முப்பதுக்கு மேற்பட்ட பிரதேச சபைகள், மாநகர சபைகளில் வரவு – செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டமையால்பிரதேசசபைத் தவிசாளர்கள் மற்றும் மேயர்கள் பதவி இழக்கும் நிலைமை. புதியவர்கள் அப்பதவிகளுக்குக் கண் வைப்பதால் மேலும் அரசியல் குழப்பம். இது பற்றியே சிந்திப்பதற்கு யாரும் இல்லை. ஜனாதிபதித் தேர்தலும், பொதுத் தேர்தலும் முடிந்தமையுடனேயே கட்சியைக் கட்டமைக்கும் கவனிப்பும் இல்லாமல் போய்விட்டது. இந்தச் சூழ்நிலையில் அவசரப்பட்டு மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முயல்வது பொல்லைக் கொடுத்து அடியை வாங்குவதாகிவிடும்.

“அதனால் ஒரே சமயத்தில் எல்லா மாகாணசபைகளுக்கும் தேர்தலை நடத்தாமல், பகுதி, பகுதியாக – மாகாணங்கள், மாகாணங்களாகப் பிரித்து – மாகாண சபைத் தேர்தல்களை நடத்தக் கூடியதாக அது தொடர்பான தேர்தல் சட்டங்களில் அரசு மாற்றம் கொண்டு வந்தாலும் வரலாம்.” – என்றால் அவர்.

அவரது கருத்துப்படி பார்த்தால், இந்தியா உள்ளிட்ட சர்வதேச அழுத்தத்தினால் வடக்கு, கிழக்கில், மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் வருமானால், வரும் மார்ச்சில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்துக்கு முன்னர் வடக்கு, கிழக்கு, மாகாண சபைக்கு மட்டும் தேர்தலை நடத்தும் அறிவிப்பை அரசு விடுக்க முடியும் எனக் கருதலாம்.

– மின்னல் –

இறுதிப்போரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவாதத்தில் உரையாற்றிய அவர் –

இன்று (நேற்று) சர்வதேச மனித உரிமைகள் தினம். இந்தத் தினத்தில் பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர், சிறைகளில் வாடும் பிள்ளைகளை நினைத்துக் கதறும் பெற்றோர் என வடக்கு, கிழக்கு எங்கும் அவலக்குரலே கேட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்த நாளில் வடக்கு, கிழக்கு எங்கும் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி அலைந்து திரிந்து கொண்டிருக்கும் அந்த மக்களின் போராட்டத்தோடு நாங்கள் கைகோர்க்கும் அதே நேரத்தில் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளிலே அடைத்து வைத்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காகவே காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் இலங்கை அரசால் உருவாக்கப்பட்டது. அந்த அலுவலகத்தின் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஏமாற்றப்பட்டு தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனர்.

காணாமல்போனவர்கள் இறந்து விட்டார்கள் என்று உறவினர்களை ஒப்புக் கொள்ள வைத்து அவர்களுக்கு மரணச் சான்றிதழ் கொடுக்கும் முயற்சிதான் நடைபெறுகின்றது.

வடக்கு, கிழக்கில் முழுமையான இனவாதக் கோணத்திலேயே நிதி அமைச்சின் திட்டங்கள் அமைந்துள்ளன.

தொல்பொருள் திணைக்களம் என்பது உலக நாடுகளிலே கலாசார அமைச்சுக்களின் கீழ் உள்ளன. ஆனால், இலங்கையில் அது பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. கோடிக் கணக்கான நிதியை நிதி அமைச்சு மூலம் ஒதுக்கிக் கொடுத்து, தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தை சிங்கள மயமாக்குகின்ற, பௌத்த மயமாக்குகின்ற செயற்பாடு கள்தான் மேற்கொள்ளப்படுகின்றன – என்றார்.

ஜனாஸாக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மிகவும் ஆழமாகக் காணப்படும் வறண்ட நிலப்பரப்பை தெரிவு செய்யுமாறு பிரதமர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

இந்த வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடலில் வைரஸ் சுமார் 36 நாள்களுக்குத் தொடர்ந்து காணப்படும் என சுகாதார அதிகாரிகள் இதன்போது பிரதமரிடம் தெரிவித்தனர்.

ஆரோக்கியத்தைப் பாதிக்கின்ற காரணிகளை இனம் மற்றும் மத அடிப்படையில் தீர்மானிக்க முடியாது எனச் சுட்டிக் காட்டிய பிரதமர், சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடிப்பதற்கு அனைத்து இன மக்களதும் ஒத்துழைப்பு அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

அதற்கான ஒத்துழைப்பைப் பெற்றுத் தருமாறு அங்கு வருகை தந்திருந்த முஸ்லிம் அமைச்சர்களிடம் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தச் சந்திப்பில் அலி சப்ரி, பவித்ரா வன்னியாராச்சி, ரோஹித அபேகுணவர்தன, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.முனசிங்க உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கில் தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கையில் –

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இந்த 9 மாதக் குழந்தையும் 75 வயது வயோதிபரும் நேற்று இனங் காணப்பட்டிருந்தனர்.

9 மாதக் குழந்தையை சிகிச்சைக்காக கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். ஆனால் குழந்தையின் பெற்றொர்களுக்குத் தொற்றில்லையென தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் தொற்றுக்களின் எண்ணிக்கை 501 ஐத் தாண்டியுள்ள அதேவேளை மாகாணத்துள் வருகின்ற கல்முனைப் பிராந்தியத்தில் தொற்றுக்கள் 344. எனவே ஏனைய 147 தொற்றுக்களும் ஏனைய 3 பிராந்தியத்துள் வருகின்றன.

கல்முனைப் பிராந்தியத்துள் வருகின்ற அக்கரைப்பற்றுக் கொத்தணியில் 308 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மீதி பிராந்தியத்தின் ஏனைய சுகாதாரப் பிரிவுகளில் இனங்காணப் பட்டுள்ளது.

பிராந்தியத்தில் தனியொரு கிராமம் அதிகூடிய தொற்றுக்களைக் கொண்டது என்றால் அது 235 தொற்றுக்களைக் கொண்ட அக்கரைப்பற்று எனலாம்.

அருகிலுள்ள அட்டாளைச்சேனையில் 37 தொற்றுக்களாக எண்ணிக்கை உயர்ந்துள்ளது. சாய்ந்தமருது மற்றும் ஆலையடிவேம்பில் தலா 14 பேர் இனங்காணப் பட்டுள்ளனர்.

இன்னும் பெறப்பட்ட பி.சி.ஆர் சோதனைகளின் பெறுபேறுகள் கிடைக்கப்பெறவில்லை. அவை வந்தால் இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிராந்தியத்திலுள்ள பாலமுனை சிகிச்சை நிலையத்தில் 82 பேரும் புதிதாக உருவாக்கப்பட்ட மருதமுனை சிகிச்சை நிலையத்தில் 68 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பிராந்தியத்திலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களான ஒலுவிலில் 72 பேரும் அட்டாளைச்சேனையில் 80 பேரும் தனிமைப் படுத்தப்பட்டுள்ள நிலையில் நுரைச்சோலை நிலையம் தயாராகி வருவதாகத் தெரிவித்தவர்,

இதுவரை கல்முனைப் பிராந்தியத்தில் எவ்வித கொரோனா இறப்பும் ஏற்படவில்லை. என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

மூன்றிலிரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரச தரப்பினரும் அதன் தோழமைக் கட்சியினரும் எதிரணியிலுள்ள சிலரும் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர், ஜே.வி.பியினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்த்து வாக்களித்தனர். இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இதற்கமைய ஆதரவாக 151 வாக்குகளும், எதிராக 54 வாக்குகளும் வழங்கப்பட்டுள்ள நிலையில், 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு திருத்தங்களுடன் 97 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்த வரவு – செலவுத் திட்டம் கடந்த மாதம் நவம்பர் 17 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

நாட்டின் 75 ஆவது வரவு – செலவுத் திட்டம் நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

நவம்பர் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடத்தப்பட்டு, மூன்றிலிரண்டு பெரும்பான்டையுடன் அது நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்னர் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று வரை நடைபெற்றது. இந்த நிலையிலேயே அதன் மீது நேற்று இறுதி வாக்கெடுப்பு நடைபெற்றது. அது மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் (151 வாக்குகளை) நிறைவேற்றப்பட்டது.

அதற்கமைய அரசின் 2021 ஆம் ஆண்டுக்கான வருமானமாக ஆயிரத்து 961 பில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், மொத்தச் செலவீனமாக 3 ஆயிரத்து 525 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி வருமானத்துக்கும் செலவுக்கும் இடையில் ஆயிரத்து 564 பில்லியன் ரூபா துண்டுவிழும் தொகையாக மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுமுன்தினம் நடத்திய சந்திப்பின் போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்றத்தில் எதிரணியிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் குறித்த உறுப்பினர்களால் என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அந்தக் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் அவர்கள் என்னுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதிக்குரிய கடிதத்தை அவரிடம் நான் சமர்ப்பிக்கவுள்ளேன். அத்துடன் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ள வேண்டுகோள் தொடர்பில் ஜனாதிபதி, நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடன் நேரில் பேசி தீர்க்கமான முடிவொன்று விரைவில் எடுக்கவுள்ளோம்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்துக்கிணங்க இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியுடன் அவர்கள் சந்திப்பதற்கான ஏற்பாட்டையும் செய்து கொடுக்கவுள்ளேன் – என்றார்.

கொரோனாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூன்றாவது அலை மூலம் இதுவரை 133 பேர் உயிரிழந்துள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நீதி கோரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறவினாகள் நீதி கோரி தமிழர் தாயகத்தில் கவனயீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். யாழ்.நாவலர் வீதியிலுள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் தாய் ஒருவர் முழந்தாளிட்டுக் கதறியழுவதைப் படத்தில் காணலாம்.

இந்திய மீனவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானித்துள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

முல்லைத்தீவு கடற்பரப்பில் அண்மைய நாள்களாக இடம்பெறும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக விசேட அவசர கூட்டம் ஒன்று நேற்று முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் இடம்பெற்றது.

இதில் மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள் மீனவர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது மீனவர்கள் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். பல தடவைகள் இந்திய மீனவர்களின் தொல்லைகள் குறித்து அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் காத்திரமான நடவடிக்கைகள் எதையும் அவர் எடுக்கவில்லை என மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் முல்லைத்தீவின் கரையோரப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் இந்திய மீனவர்களை அவதானித்து வருவதுடன் அதனைத் தடுப்பதற்கு அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

இந்தநிலையில் தாமாகவே இன்று காலை கடலுக்குச் சென்று தென்னிந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்க இருக்கின்றனர் எனவும் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:–

போர் முடிவுற்றபோது சரணடைந்த விடுதலைப்புலி போராளிகளைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தி விடுதலை செய்திருந்தீர்கள். அந்த நேரம் அவர்களுக்குப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை. ஆனால், அதற்கு முன்னர் கைதுசெய்யப்பட்டவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு இன்றும் சிறையில் உள்ளனர்.

அவர்களின் விடுதலை தொடர்பில் பிரதமரை நேரில் சந்தித்து எழுத்து மூலமாகக் கடிதமொன்றை கொடுத்திருந்தோம். எனவே, பிரதமர் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

வடக்கு மக்களுக்கு மூன்று வேளை உணவே போதுமானது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியிருந்தார். இந்தக் கருத்தை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். ஒரு சிலர் உங்களுக்கு ஆதரவாக வாலாட்டுவார்களே தவிர, உண்மையான தமிழர் ‘தமிழன்’ என்ற அடையாளத்துடன் வாழவே விரும்புகின்றனர் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல் அமைச்சர் சரத் வீரசேகரவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டும் எனக் கூறியிருந்தார். இது அவரது தனிப்பட்ட கருத்தா அல்லது அரசின் நிலைப்பாடா எனப் பிரதமர் அறிவிக்க வேண்டும்.

மன்னார் – வங்காலை இராணுவச் சோதனை சாவடிப் பகுதியில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் தாக்கியுள்ளனர். முகக்கவசம் அணியவில்லை, அடையாள அட்டை இல்லை எனக் கூறித் தாக்கியுள்ளனர். எமது மக்களைத் தாக்க வேண்டும் என்ற அதிகாரத்தை உங்களுக்கு யார் கொடுத்தது? இந்த ஆட்சியில்தான் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன – என்றார்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னுள்ள அரசியல்வாதிகள் மக்களை மடையர்களாக்க எத்தனிக்கின்றார்கள்

ஆர்ப்பாட்டக்காரரர்கள் முன் தவிசாளர் நிரோஷ் காட்டம்

அபிவிருத்தியைத் தடுப்பது எனதோ அல்லது பிரதேச சபையினதோ நோக்கம் கிடையாது. மாறாக அபிவிருத்தியை சட்ட திட்டங்களுக்கு ஏற்ப ஒழுங்கு படுத்துவதே எமது நோக்கம் இந்நிலையில் மக்களை மடையர் ஆக்காதீர்கள். அரசியலுக்காக மலினப்படுத்தாதீர்கள் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அபிவிருத்தியைத் தடுக்கின்றார் எனக் குற்றஞ்சாட்டி பிரதேச சபையின் முன் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் அச்செழு அம்மன் வீதியைச் சேர்ந்த மக்கள் அழைத்துவரப்பட்டு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் பிரதேச சபை வாசலில் மறித்திருந்தனர். இந் நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களை தவிசாளர் தானாகச் சென்று சந்தித்து நிலைமையைப் புரிய வைத்திருந்தார்.

இதன்போது அபிவிருத்தியை தடுப்பது எங்கள் யாருடைய நோக்கமும் அல்ல. எமது சபைக்குப் பகிரப்பட்ட அதிகாரம் ஒன்றை மத்திய அரசாங்கம் நிராகரிக்கின்ற நிலையில் அதனை சகித்துப்போக முடியாது. அதிகாரப்பகிர்வினை நாங்கள் வலியுறுத்துகையில் மத்திய அரசாங்கம் அபிவிருத்தி ஒன்றை மேற்கொள்ள வேண்டுமாக இருப்பின் உரிய முறைப்படியான அனுமதிகளை பெறுமாறே வலியுறுத்துகின்றோம். அந்த அனுமதிக்கு முறைப்படியான கடிதம் கிடைக்கப்பெற்றால் உடன் சபையைக்கூட்டி அனுமதி தீர்மானிக்கப்படும். உரிய அனுமதிகள் பெறப்படின் அபிவிருத்தியை மேற்கொண்டு முன்னெடுக்க நாமும் ஒத்துழைப்போம். சாதாரணமாக நிர்வாக ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்களாக இவை இருந்தபோதும் பகிரப்பட்ட அதிகாரம் ஒன்றை அனுபவிப்பதற்கான மோதல்களே நடக்கின்றன. இவ் விடயத்தினை கிராமங்களில் சென்று பிழையாக அர்த்தப்படுத்தக்கூடாது. மக்களின் அரசியல் அபிலாஷைகளை சிதறடிப்பதற்காக சாதிய அடிப்படையிலான கருத்துக்களைக் கூறி மக்களை பிழையாக வழிநடத்த எத்தனிக்கின்றனர்.

உங்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை என்ற ரீதியிலும் அரச தாபனம் என்ற ரீதியிலும் எந்த விடயத்திலும் சாதிய ரீதியிலான சிந்தனைகள் எம்மிடம் கிடையாது. முற்போக்காகவே வலி.கிழக்கு பிரதேச சபை சிந்திக்கின்றது. இந் நிலையில் இவ் ஆர்ப்பாட்ட ஏற்பாடு செய்த அரசியல்வாதிகளுக்கு சில விளக்கத்தினை நாம் கொடுக்கவேண்டியுள்ளது. அபிவிருத்தியை தவிசாளர் தடைசெய்கின்றார் என கிராமங்களில் சென்று மக்களை மடையர்கள் ஆக்காதீர்கள். அரசியலுக்காக எமது மக்களை மலினப்படுத்தாதீர்கள். எமது மக்கள் தியாகங்களுக்குச் செந்தக்காரர்கள். அவர்களின் குடும்பக் கஷ்டத்தினை வைத்து மக்களை எவ்வாறும் கையாளலாம் எனக் கனவு காணாதீர்கள். மக்கள் ஆர்ப்பாட்டமாக வந்த பின்னர் எமது உண்மைகளைக் கண்டுகொண்டனர். மக்களை நாம் மதிக்கின்றோம்.– என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

எதிர்த்து ஆர்ப்பாட்டக்காரரும் எமது மக்களே என அவர்களுடனேயே கிராமத்திற்கு சென்ற தவிசாளர்

வலிகாமம் கிழக்கப் பிரதேச சபைத் தவிசாளர் அபிவிருத்திகளுக்குத் தடைபோடுகின்றார் எனக் குற்றஞ்சாட்டி வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்பாக அச்செழுவில் உள்ள அம்மன் வீதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ் ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் பிரதேச சபை வாயிலுடன் மறித்து நிறுத்திய நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் நேரில் சென்று சந்தித்து உண்மை நிலையைப் புரிய வைத்ததுடன் ஆர்பாட்டக்காரர்களுடன் குறித்த வீதிவரை சென்று மக்கள் சந்திப்பினை நடத்தியுள்ளார்.

தவிசாளர் அபிவிருத்தியைத. தடைசெய்கின்றார் என்று தெரிவித்தும் சாதிய அடிப்படையில் அச்செழு அம்மன் வீதி அபிவிருத்தி செய்யப்படவில்லை எனக் குற்றம் சுமத்தியும் கடந்த இரண்டு நாள்களாகப் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை அரசியல் பின்னணியுடையோர் ஏற்பாடு செய்யப்பாடு செய்தனர். எனினும் குறித்த ஆர்பாட்டத்தில் இன்றைய தினம் 35க்கு உட்பட்டவர்களே பங்கெடுத்தனர். அவர்கள் மினிவான் மூலம் கொண்டுவரப்பட்டு இறக்கிவிடப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் புத்தூர் சந்தியில் இருந்து சுலோகங்கள், பனர்களுடன் பிரதேச சபையை அண்மித்தபோது பிரதேச சபை வாயிலில் வைத்து பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை மறித்தனர்.

இந் நிலையில் அவர்களை கடந்த சில தினங்களாக நெருக்கடிகளை எதிர்கொண்ட நிலையில் நேற்றுக் கடமையாற்றிக் கொண்டிருந்த தவிசாளர் தானாக நேரில் சென்று மக்களின் கருத்துக்களை கேட்டறிந்தார். ஆர்ப்பாட்டத்தில் கர்ப்பிணித்தாய் ஒருவர் நிற்கின்றார் என்பதை அவதானித்து அவருக்கு தானே கதிரை ஒன்றையும் எடுத்துவந்து வழங்கி அமரவைத்து விட்டு மக்களிடம் அபிவிருத்திக்குத் தாம் தடையல்ல, உரிய சட்டதிட்டங்கள் அதிகாரப் பகிர்விற்கு மதிப்பளித்த அபிவிருத்தியையே நாம் வரவேற்கின்றோம் என நீண்ட விளக்கத்தினை வழங்கினார். தவிசாளரின் விளக்கத்தின் பின் கேள்விகளைக் கேட்ட மக்கள் திருப்தியடைந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கிராமத்தில் இருந்து 23 பேர் விடுதலைப் போராட்டத்தில் மாவீரர்களாகியுள்ளனர் என்பதையும் தவிசாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் தவிசாளர் உடனேயே அவர்களது வீடுவரை சென்று குறைநிறைகளைக் கேட்டறிந்த சம்பவம் இடம்பெற்றது. இதன்போது வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் உப தவிசாளர் மகேந்திரலிங்கம் கபிலனும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடியிருப்புகளை விடுவிக்கத் திட்டம்!

கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள தொடர்மாடி குடியிருப்புகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல்சவேந்திரசில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய குறித்த தொடர்மாடி குடியிருப்புக்களில் வசிப்பவர்களுக்கு பி.சி. ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை விரைவுபடுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இறுதியாக அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களில் அதிகளவானோர் கொழும்பு – 15 முகத்துவாரம் மற்றும் மட்டக்குளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என இராணுவத் தளபதி இதன்போது கூறியுள்ளார்.

இந்த நிலையில், இந்த பகுதிகளில் சுமார் 14 தொடர்மாடி குடியிருப்புகள் 06 வாரங்களுக்கு மேலாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் விசேட பணிப்புரைக்கு அமைய இந்தத் தொடர்மாடி குடியிருப்புகளை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, தொடர்மாடி குடியிருப்பு களில் இதுவரை பி.சி.ஆர். அல்லது அன் டிஜன் சோதனைகளை மேற்கொள்ளாதவர்களுக்கு விரைவாக அவற்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

இருபது நாள்களேயான குழந்தை உயிரிழப்பு இலங்கை பாடம் கற்றுக்கொள்ளவேண்டும்!

பிறந்து 20 நாள்களேயான குழந்தையின் உயிரிழப்பிலிருந்து இலங்கை பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பெற்றோர் தொற்றுக்கு உள்ளாகியிருக்காத நிலையில் குழந்தைக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பதை கொரோனா மரணங்கள் தொடர்பான மீளாய்வு குழு ஆராய்ந்து உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என அந்த சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே வலியுறுத்தினார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

செவ்வாயக்கிழமை உயிரிழந்த குழந்தைக்குத் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ள போதிலும் அந்தக் குழந்தையின் பெற்றோருக்கு தொற்று ஏற்படவில்லை. அவ்வாறெனில் குழந்தைக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது கண்டறியப்பட வேண்டும்.

தற்போது ஒரு குழந்தை மாத்திரமே உயிரிழந்துள்ள போதிலும் இதிலிருந்து நாம் அனைவரும் பாடமொன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறான காரணிகளை அடிப்படையாகக் கொண்டே துரிதமாக கொரோனா மரணங்கள் தொடர்பான மீளாய்வுக் குழுவை நியமிக்குமாறு வலியுறுத்தினோம். இந்த மரணம் தொடர்பில் மீளாய்வு செய்வது அந்தக் குழுவின் பொறுப்பாகும்.

குழந்தை மிகவும் தாமதமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமையே மரணத்துக்கான காரணம் என்று வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பத்தில் தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் முதியவர்களும் கொவிட் தொற்றால் உயிரிழந்தனர். ஆனால் தற்போது இளைஞர்களும் உயிரிழக்கின்றனர்.

எனவே இலங்கையில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை சுகாதார அமைச்சு நாட்டுக்கு தெரியப்படுத்தும் என எதிர்பார்க்கின்றோம். – என மேலும் தெரிவித்தார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

ஒரே குரலில் பேசிச் செயலாற்றுவோம்!

வரவு – செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நேற்று எதிர்பார்த்த மாதிரி நடந்து முடிந்து விட்டது. தன் விருப்பப்படி அரசு அதனைத் தாராளப் பெரும்பான்மையோடு நிறைவேற்றிவிட்டது.

இது, வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு. இதில் எதிர்பார்க்கப்பட்டபடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கவில்லை.

இதை வைத்துக் கொண்டு கூட்டமைப்பு மீதான சேறு வாரல்கள் வழமைபோல தொடங்கிவிடும்.

கோட்டா அரசுடன் மோதத் துணிவில்லை, அராஜக ஆட்சியை எதிர்க்கத் தைரியமில்லாதவர்கள் ஏன் நாடாளுமன்றம் போக வேண்டும், வாக்களிப்பில் பங்குபற்றாமை மூலம் அராஜக ஆட்சியை ஆதரித்துள்ளனர் – என்றெல்லாம் வித்துவம் பேசப்படும்; வியாக்கியானங்கள் கிளம்பும்.

கோட்டாபய அரசின் வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்து, தமிழர்களின் ஒற்றுமைப்பட்ட சீற்றத்தைக் காட்டுவதற்கு இருந்த வாய்ப்பை நாசமாக்கியதன் மூலம் தமிழ்க் கூட்டமைப்பு தமிழினத்துக்குத் துரோகம் செய்து விட்டது, கோட்டாபய அரசின் அடக்குமுறைக்குப் பயந்து முடங்கிப் பதுங்கிக் கொண்டு விட்டது என்றெல்லாம் கூட விமர்சனங்கள் வரும்.

குறைந்தபட்சம் கோட்டா அரசு மீதான வெறுப்பை – தமிழ் மக்களின் எதிர்ப்பை – அந்த அரசின் வரவு – செலவுத் திட்டத்தை எதிர்ப்பதன் மூலம் பதிவு செய்திருக்கலாம், அதைச் செய்யத் தவறிக் கூட்டமைப்பு பெரும் தவறிழைத்து விட்டது என்றும் கூறுவார்கள்.

மைத்திரி – ரணிலின் நல்லாட்சி அரசில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் வைத்துக் கொண்டு அந்த அரசின் – வரவு செலவுத் திட்டங்களை எல்லாம் கூட்டமைப்பு ஆதரித்தது. அதற்கு ஒரு நியாயம் இருந்தது.

அதேபோல இப்போதும் ராஜபக்ஷ அரசின் வரவு – செலவுத் திட்டத்தைக் கடுமையாக எதிர்ப்பதற்கான நியாயம் தமிழர் பக்கத்தில் நிறையவே உண்டு. அதனை வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் நிறைவுபடுத்தியிருக்க முடியும். அதை கூட்டமைப்பு செய்யத் தவறியமை மிக மோசமான தவறு என்று விமர்சனங்கள் நிச்சயம் எழும்.

உண்மையில் இந்த வரவு – செலவுத் திட்டத்தைக் கூட்டமைப்பு எதிர்ப்பதாயின் அதனை அந்தத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின் போதுதான் செய்திருக்க வேண்டும். வரவு – செலவுத் திடடத்தில் அதுதான் மிக முக்கியமான ஒன்று.

அப்போதும் இந்த வாக்கெடுப்பில் கூட்டமைப்பு பங்குபற்றவில்லை. விலகியே நின்றது.

அப்போது அதனை யாரும் பெரிதாகப் பார்க்கவில்லை. இப்போதும் கூட அப்படிக் கவனிக்காமல் விடுவார்களாயின், அது நல்லது.

காரியங்களை ஆற்றுவதற்குக் கனிந்து வரும் சூழலைக் கெடுக்காமல் நாம் பார்த்திருக்க வேண்டும்.

அந்த அர்த்தத்தில்தான் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத முடிவை – வரவு, செலவுத் திட்டத்தை ஆதரிப்பதும் இல்லை, எதிர்ப்பதும் இல்லை என்ற தமது தீர்மானத்தை – சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு எடுத்திருக்கும் என்று கருதப்படுகின்றது.

நாம் ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டு வருகின்றமை போன்று, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் விரைந்து, நியாயமான தீர்வு ஒன்றைக் காணும்படியான அழுத்தம் – சர்வதேச தரப்புகளிடமிருந்து – கொழும்புக்குக் கிட்டும் சூழல் தென்படுகின்றது.

கனிந்து வரக்கூடிய இந்திய உட்பட்ட சர்வதேசத் தரப்பின் அழுத்தங்களை எதிர்கொண்டு கையாள்வதற்கு தமிழர் தரப்பாகிய நாங்கள் இரண்டு விடயங்களைக் கவனத்தில் நிறுத்த வேண்டும்.

ஒன்று – கனிந்து வருகின்ற சூழலை அவசரப்பட்டு – ஆர்ப்பாட்டமாய்ச் செயற்பட்டு – நாம் குழப்பி விடக் கூடாது. இந்தியா உட்பட்ட சர்வதேச சமூகத்தோடு ஒத்திசைந்து நாம் செயற்படத் தயாராக இருக்க வேண்டும்.

அடுத்தது – தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் சக்திகள் ஒன்றுபட்டு, ஒருகுரலில் பேச வேண்டும். தமிழத் தேசியம் மற்றும் தீர்வு தொடர்பான விடயங்களில் முட்டிமோதி, முரண்பட்டு, எதிரும் புதிருமாகக் கருத்து வெளியிட்டு, பிரிந்து நிற்பதன் மூலம் இவ்விடயங்களை சர்வதேசம் அணுகுவதையும் சிக்கலாக்கிக் குழப்பும் போக்கை அறவே நிறுத்த வேண்டும். இராஜதந்திர ரீதியில் தமிழருக்காகக் குரல் எழுப்பும் சர்வதேசத் தரப்புகள் எங்களின் உள்பிணக்குகளினால் இவ்விடயத்தில் விலகிச் செல்லும் சூழ்நிலையை நாமே உருவாக்கி விடக்கூடாது.

சர்வதேசப் பின்புலப் பங்களிப்போடு தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தைக் கையாள வேண்டிய நெருக்குவாரம் கொழும்புக்கு அதிகரிக்கும் போது தமிழர் தரப்பைப் பிரித்தாளவே கொழும்பு ஆட்சி அதிகாரம் முயற்சிக்கும். அதுதான் நமது கடந்த காலப் பட்டறிவு. மாகாணசபைத் தேர்தல் போன்றவற்றை அறிவித்து எங்களிடையே உள்குத்தை – பிணக்கை – ஏற்படுத்த சிங்களம் முயற்சிக்கும். நாம்தான் சுதாகரித்து எச்சரிக்கையாகச் செயற்பட வேண்டும்.

அரசியல் கைதிகளின் விடுதலை இந்த அரசின் கீழ் சாத்தியப்படாது!

அருட்தந்தை சக்திவேல் அதிருப்தி

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதென்பது தற்போதைய அரசாங்கத்தின் கீழ் சாத்தியப்படாது. எனவே இதுவிடயத்தில் வெளிநாட்டு சக்திகளுடனும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுடனும் பேச்சுகளை நடத்துவதற்குத் தயாராகி வருகின்றோம் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் சிலர் அரசியல் கைதிகளை விடுவிக்க கோரியுள்ள போதிலும், அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில, அரசியல் கைதிகள் என்று எவரும் நாட்டின் சிறைச்சாலைகளில் இல்லை என்று கூறியுள்ளமை தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசியல் கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்த வேண்டும் என்று ஆளுந்தரப்பின் தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதியமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். எனவே இந்த நாட்டில் அரசியல் கைதிகள் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இது தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு அவர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோதே, அரசியல் கைதிகள் எவருமில்லை என்று உதயகம்மன்பில கூறியிருக்கிறார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதேபோன்று அரசியல் கைதிகள் எவருமில்லை என்று முன்னர் ஒருமுறை கூறியிருந்தார்.

அதேவேளை தற்போதைய அரசாங்கம் தேர்தல் பிரசாரத்தின்போதே இந்த நாட்டில் அரசியல் பிரச்சினை இல்லை என்றும் பொருளாதார மற்றும் அபிவிருத்திசார் பிரச்சினைகளே இருக்கின்றன என்றுமே கூறி வந்தது. ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் சிந்தனையைப் பிரதிபலிக்கும் விதமாகவே தற்போது உதயகம்மன்பில மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

எனவே அரசியல் கைதிகளை விடுதலை செய்வதென்பது தற்போதைய அரசாங்கத்தின் கீழ் சாத்தியப்படாது என்பது தெளிவாகின்றது. ஆகவே இந்த விடயத்தில் வெளிநாட்டு சக்திகளுடனும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுடனும் பேச்சுகளை நடத்துவதற்குத் தயாராகி வருகின்றோம்.- என்றார்.

வெடியரசன் கோட்டையை அபகரிப்பை நிறுத்துங்கள்!

சிறி எம்.பி. சபையில் வலியுறுத்தல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.10

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள வெடியரசன் கோட்டையை தனது திணைக்கள உடமையாக்கி தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள காணி அபகரிப்பு நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் உரையாற்றும்போதே மேற்படி கோரிக்கையை அவர் விடுத்தார்.

நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டையென்பது தமிழ், பௌத்த அரசன் வாழ்ந்த இடம். இந்தக் கோட்டை அமைந்ததன் காரணமாகவே அந்த இடம் கோட்டைக்காடு என அழைக்கப்படுகின்றது. இந்தக் கோட்டையானது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதலாவது கிராம சேவகர் பிரிவான ஜே/01 இல் அமைந்துள்ளது.

அந்த இடத்தை அபகரிக்கும் நோக்கில் நவம்பர் மாதம் 27ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச இதழை இரத்துச் செய்து அபகரிப்பை நிறுத்த வேண்டும்.

இந்த நடவடிக்கை மூலம் வெடியரசன் கோட்டைப் பகுதி பௌத்த சின்னமாகக் காண்பித்து ஆக்கிரமிக்கப்படவுள்ளது.

இங்கே இதனோடு தொடர்புடைய அமைச்சரும் இருப்பதனால் இதற்குரிய தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம். - என்றார்.

திருஞானசம்பந்தபிள்ளை புதனன்று காலமானார்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவரும் முதுபெரும் தமிழறிஞருமான மு.திருஞானசம்பந்தபிள்ளை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் காலானார்.

சைவ சித்தாந்தப் புலமையும், தமிழ்ப் புலமையும், ஆங்கிலப் புலமையும் கொண்டவரும் இந்திய சைவசித்தாந்த சமாஜத்தின் சைவப்புலவர் தேர்வில் தங்கப்பதக்கம் பெற்ற பெருமையுடையவரும், யாழ் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி (MA) கற்கையின் வருகை விரிவுரையாளரும், அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நீண்டக்காலமாக தலைவராக நின்று சைவப்பணியாற்றிய சங்கத்தின் தலைவர் ஓய்வுநிலை அதிபர் சைவசித்தாந்தப் பண்டிதர் சைவப்புலவர்மணி கலைஞானச்சுடர் சைவப்புலவர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தப்பிள்ளை காலமானார். சிறிது காலம் அவர் சுகவீனமுற்றிருந்தார்.

அவரின் இறுதிக் கிரியைகள் கொக்குவிலில் நேற்று மாலை இடம்பெற்றன.

யாழ் சைவபரிபாலன சபையின் தலைவராகவும் அவர் அரும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அனலைதீவில் பசுவதைகள் அதிகரிப்பு என குற்றச்சாட்டு!

அனலைதீவில் சட்டத்துக்குப் புறம்பாக பசு மாடு ஒன்றை இறைச்சிக்கு கொலை செய்த நிலையில் கும்பல் ஒன்று தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக பசுவதை அதிகரித்து வரும் நிலையில் இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை அனலைதீவு 5 ஆம் வட்டாரத்தில் இடம் பெற்றுள்ளது. பசு மாட்டை இறைச்சிக்காக கொலை செய்த நிலையில் அந்த வழியால் சென்றவர்கள் கண்ணுற்றமையால் கும்பல் அங்கிருந்து தப்பித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவகத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளை சில கும்பல்கள் இறைச்சிக்காக அவற்றை கொலை செய்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

இந்தக் கும்பல்களுக்கு எதிராக தீவக மக்கள் மற்றும் பொது அமைப்புகள் தொடர்ந்தும் குரல் கொடுத்து வரும் நிலையில், கும்பல்களின் அட்டகாசம் அதிகரித்தே செல்வதாக மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

பருத்தித்துறை நகரசபை
பொது அறிவித்தல்கள் 2021

இல	விடயம்	அறிவித்தல்கள்
1	ஆதனவரி	2021 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான ஆதனவரியானது தற்போது நடைமுறையில் இருக்கும் ஆண்டு பெறுமதியின் 10% சதவீத அடிப்படையில் அறவிடப்படும். இவ்வாதன வரித்தொகைகள் 2021 மார்ச் 31, ஜூன் 30, செப்டெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் காலாண்டுகளுக்கு ஒரு தடவை செலுத்தப்படல் வேண்டும். 2021 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டின் நான்கு கந்தாயங்களுக்குரிய ஆதனவரியை ஒரே தடவையாகவே செலுத்தினால் 10% வரிக்கழிவும் ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தினால் 5% வரிக்கழிவும் வழங்கப்படும். குறித்த காலாண்டிற்குள் வரி செலுத்தாது விட்டால் அதற்காக முறையே தரிசுநிலம், வதிவிடங்களுக்கு 15%மும், வியாபார நிலையங்களுக்கு 20% மும் பற்றாணைச் செலவாக (தண்டம்) ஆதனவரியுடன் சேர்த்து அறவிடப்படும்.
2	ஆதனப்பதிவேட்டில்பெயர் மாற்றம் செய்தல்	ஆதனம் உடமை மாற்றம் செய்யப்பட்டிருந்தும், சபையின் ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யாதவர்கள் ஆவணங்களை நகரசபை அலுவலகத்தில் சமர்ப்பித்து பெயர்மாற்றத்தினை மேற்கொள்ள வேண்டும்.
3	காணி உபபிரிவிடுகை	ஆதனம் ஒன்று துண்டுகளாக பிரிக்கப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளல் வேண்டும்
4	1978ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழாக கட்டட அனுமதி வழங்கல்	1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயினும் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துவதாயினும் நகரசபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்பே அமைக்கப்பட வேண்டும். 2. புதிய கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் உரிய கட்டணத்தை செலுத்தி கட்டட அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்க வேண்டும். 3.அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட பின்பே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.
5	சூழல் பாதுகாப்பு உரிமம்	2000 ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 'இ' பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் /வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சூழல்பாதுகாப்பு உரிமத்தினை 2021.03.31ஆந் திகதிக்கு இற்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும். அவ்வாறு சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெறத்தவறுபவர்கள் 2021 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார/ தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதனையும் அறியத்தருகின்றேன்.
6	வியாபார அனுமதிப்பத்திரம்/ வியாபாரவரி	வியாபார, கைத்தொழில் நிலையங்களுக்கான உரிமத்தினை/வியாபார வரியினை 2021.03.31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்து உரிய கட்டணத்தை செலுத்தி உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
7	துவிச்சக்கரவண்டி உரிமம் வளர்ப்பு நாய்களுக்கான உரிமம்	2021.01.31ஆந் திகதிக்கு முன் கட்டணத்தினை செலுத்தி உரிமத்தினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
8	விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல்	நகரசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி அனுமதியைப் பெற்றே காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப் படும்.
9	தெருவோர வியாபாரம்	வியாபார நிலையங்களுக்கு முன்னால் பாதசாரிகள் போக்குவரத்துக்கு இடையூறாக பொருட்கள் காட்சிப்படுத்தல் விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது. சபையின் பொதுச் சந்தை, இறைச்சிக் கடைகளில் இருந்து 500m சுற்றாடலில் மரக்கறிகள், கடல் உணவுகள், இறைச்சிகள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
10	கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல்	சபை எல்லைக்குள் கட்டாக்காலியாக நாய்கள், ஆடு, மாடுகளை அலைந்து திரிய அனுமதிக்கும் பொதுமக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
11	பொது சுகாதாரத்தைப் பேணுதல்	அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவுசெய்யப்படுவதுடன் உணவு கையாளும் நிலையபணியாளர்கள் மருத்துவப் பரிசோதனையினை மேற்கொண்டு அனுமதி அட்டையினை பெற்றிருத்தல் வேண்டும்.
12	பொது இடங்களில் கழிவு போடுதலும் நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும்	திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடைசெய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கழிவுப் பொருட்களை தரம்பிரித்து ஒழுங்குபடுத்தல் வேண்டும். உணவகங்கள் விடுதிகளில் இருந்து கழிவு அகற்றுவதற்கான கட்டணம் அறவிடப்பட்டே சேவை வழங்கப்படும்.
13	படவரைஞர்களை பதிவு செய்தல்	நகரசபையில் பதிவு செய்யப்பட்ட படவரைஞர்கள் தமது பதிவினை 2021.03.31 ஆந் திகதிக்கு முன்னதாக புதுப்பித்தல் வேண்டும். புதிதாக பதிவு செய்யவிரும்புவோர் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பதிவு செய்து கொள்ள முடியும்.
14	வீதி ஒழுங்கைப் பேணுதல்	பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்க்கும் முகமாக வீதிச் சட்ட ஒழுங்கைப் பேணுமாறும் வீதியோரங்களில் பூமரங்களை நாட்டி அழகுபடுத்தல் மற்றும் வீதி பராமரிப்பு எல்லைக்குள் நிரந்தர கட்டுமான வேலைகள் போன்றவற்றை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் வீதியோரத்தில் உள்ள வியாபார நிறுவனங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், வீதியோரத்தில் கட்டடப் பொருட்களைப் போட்டு இடையூறு செய்தல், நகரசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகிறேன்.

மேற்கூறிய விடயங்கள் தொர்பில் பொதுமக்கள் மற்றும் தொடர்புபட்டோரின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத்தவறுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பருத்தித்துறை நகரசபை
10.12.2020

யோ.இருதயராசா,
தவிசாளர்.
பருத்தித்துறை நகரசபை.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது!

பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் இருவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்தில் நேற்று (புதன்கிழமை) ஈடுபட்ட இருவரை வழிமறித்த நெல்லியடி பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர், அனுமதிப்பத்திரத்தைக் காண்பிக்குமாறு கேட்டுள்ளார்.

அதன்போது அவர்கள் இருவரும் பொதுச் சுகாதார பரிசோதருடன் முரண்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாடு தொடர்பில் குடிதண்ணீர் விநியோகத்தில் ஈடுபட்ட இருவரையும் விசாரணைக்கு அழைத்த பொலிஸார், அவர்களைக் கைது செய்துள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் இருவரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

---

2 ஆயிரத்து 467 ஏக்கர் நெற்செய்கை மட்டக்களப்பில் அழிந்து நாசமானது!

846 விவசாயிகள் பாதிப்பு

புரெவி புயல் காரணமாக ஏற்பட்ட காலநிலை மாற்றம் மற்றும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 467 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை நீரில் மூழ்கி நாசமாகியுள்ளன என மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி பணிப்பாளர் எம்.ஜெகந்நாதன் தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக விவசாயத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 846 விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் வவுணதீவு, வாகரை, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி கிரான், செங்கலடி, ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் அதிகமான நெல் வயல்கள் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளன. மாவட்டத்திலுள்ள 18 பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வயல் நிலங்களில் வெள்ளநீர் தேங்கியுள்ளது.

தொடர்ந்து வேளாண்மை செய்கைக்குள் அதிகளவிலான நீர் தேங்கியுள்ளதால் பயிர்கள் அழுகி வருகின்றன எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மஹர சிறைச்சாலை மோதல் 8 சடலங்கள் அடையாளம்!

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது உயிரிழந்த மற்றுமொரு கைதியின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், உயிரிழந்த 11 கைதிகளில் 8 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைதியின்மையின் போது மஹர சிறைச்சாலையின் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் 228 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

மஹர சிறைச்சாலையின் கைதிகள் சிலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டமையைத் தொடர்ந்து மேலும் சில கைதிகள் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் செல்ல முயற்சித்த சம்பவத்தைக் காரணமாகக் கொண்டு அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அதன்படி, சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனை கைதிகளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் தாக்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 104 பேர் காயமடைந்து றாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

சர்வதேச மனித உரிமைகள் தினம் முல்லைத்தீவிலும் போராட்டங்கள்

INTERNATIONAL HUMAN RIGHTS

10.12.2020
Families of the disappeared are protesting for over 1000 days demanding justice from a country that doesn't respect Human Rights!

கோட்டா அரசே
காணாமல் போனவர்கள் எங்கே?

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கின் பல பாகங்களில் கவனவீர்ப்பு போராட்டங்கள் வலுப்பெற்றிருந்தன.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று (வியாழக்கிழமை) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாள் முல்லைத்தீவில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்பு போராட்டமானது நேற்று 1,373 ஆவது நாளாக தொடர்ந்தும் காணாமலாக்கப்பட்டோர் உறவுகளால் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பங்கெடுத்திருந்தமையுடன், போராட்டத்தின் இறுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் உயர்ஸ்தானிகருக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் பங்கேற்றிருந்தார்.

கொரோனாவிலிருந்து 461 பேர் குணமடைவு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 461 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (வியாழக்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, கொரோனா தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆயிரத்து 261 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 72 ஆக பதிவாகியுள்ளது.

இவர்களில் 22 ஆயிரத்து 261 பேர் குணமடைந்துள்ள நிலையில், மேலும் 7 ஆயிரத்து 667 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் இதுவரையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 144 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனமை குறிப்பிடத்தக்கது.

பொதுமக்களின் ஒத்துழைப்பை கோருகிறது சுகாதார அமைச்சு!

நாட்டில் கொவிட் வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் கிறிஸ்மஸ் உள்ளிட்ட பண்டிகைகளின் போது வைரஸ் மேலும் பரவாமலிருக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமாகிறது.

அதற்கமைய பண்டிகை கொண்டாட்டங்களின் போது மக்கள் பின்பற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு அறியத்தருகிறது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடைகளுக்குச் செல்கின்றமையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது குடும்பத்தில் ஒருவர் மாத்திரமே செல்ல வேண்டும். இவ்வாறு கொள்வனவு செய்யும் போது இயன்றளவு வீட்டுக்கு மிக அருகிலுள்ள கடைகளுக்குச் செல்கின்றமை சிறப்பாகும்.

மக்கள் கூட்டமாக ஒன்றிணைந்து வழமையைப் போன்று பண்டிகையைக் கொண்டாடாமல் அவரவர் வீடுகளிலேயே கொண்டாட வேண்டும். அதே போன்று வாழ்த்து தெரிவிப்பதற்காக ஏனையோரை சந்திப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் சமூக இடைவெளியைப் பேணக் கூடியதாகவிருக்கும்.

தொற்றா நோய் மற்றும் நாட்பட்ட வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் வைரஸால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகும். எனவே இவ்வாறானவர்களையும் முதியவர்களையும் வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதை தவிர்த்துக் கொள்ளவும்.

(மற்றொரு செய்தி 10 ஆம் பக்கத்தில்)

இலங்கையில் மனித உரிமைகளுக்கு எந்த மரியாதையும் இல்லவேயில்லை

விசனத்துடன் ரவிகரன் சுட்டிக்காட்டு

(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கையில் மனித உரிமை என்ற விடயத்திற்கு மரியாதையே இல்லை என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசானது ஐ.நா. சபையில் உறுப்பு நாடாக இணைந்து கொண்டு 1955ஆம் ஆண்டு மனித உரிமை கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டபோதும், தொடர்ச்சியாக இலங்கை இரசு தமிழர்களை அழிக்கின்ற செயற்பாட்டை முன்னெடுப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை தினத்தில் முல்லைத்தீவு – வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

ஐ.நா.பொதுச்சபையானது 1948.12.10அன்று அனைத்து உலக மனித உரிமைகள் என்னும் ஒரு பிரகடனத்தினை வெளியிட்டிருந்தது.

குறிப்பாக அப் பிரகடனத்திலுள்ள அமசங்களாக, சாதி, மதம், இனம், பால், நிறம், மொழி, நாடு என்ற பாகுபாடுகளைக் களைந்து நல்லமுறையில் சேவையாற்றவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இது உருவாக்கப்பட்டது.

இந் நிலையில் தனிமனிதன் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு வழி செய்வதே மனித உரிமைகள் தினமாகும்.

இந்த மனித உரிமைகள் தினமானது 1950களிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை அரசானது இதன் உறுப்புநாடாக இருந்து கொண்டு 1955ஆம் ஆண்டு இக்கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டது.

இவ்வாறு மனித உரிமை தொடர்பான கொள்கைகளை இலங்கை ஏற்றுக்கொண்டதன் பின்னர், 1956, 1958, 1977, 1983, 2009 இன்னும் பல ஆண்டுகளிலும் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைளை இலங்கை அரசு கச்சிதமாக மேற்கொண்டுவருகின்றது.

இது தொடர்பிலே அமெரிக்கா முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கூட கருத்துத் தெரிவித்திருக்கின்றார். தமது நினைவுத் தொகுப்பு நூலில் குறிப்பிட்டுள்ளார். அதிலே குறிப்பாக இலங்கைபோன்ற இடங்களில் இனப்படுகொலையினைத் தடுக்க ஐ.நா.சபை தவறிவிட்டதென தெரிவித்திருக்கின்றார்.

அந்த வகையில் அமெரிக்க அதிபராக இருந்த ஒபாமா கூட இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அத்தோடு அப்படுகொலையினைத் தடுக்க ஐ.நா தவறிவிட்டது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

மனிதஉரிமைக்கு இங்கு மரியாதை கொடுக்கப்படவே இல்லை. நிச்சயமாக ஐ.நா. சபை எதற்காக இந்த மனித உரிமை தினத்தினை ஆரம்பித்ததோ, அது இலங்கையில் பின்பற்றப்படுவதில்லை. இலங்கையைப் பொறுத்தவரையில் மனித உரிமைகள் பொய்த்துவிட்டன.

ஏன் எனில் தமிழ் இனத்தினை வேரோடு அழிக்கின்ற ஓர் தினமாக மனித உரிமை தினம் பிரகடனப்படுத்தப்பட்டதோ அல்லது அக்கொள்கைக்குள் இலங்கை அரசு உளவாங்கப்பட்டுள்ளதோ என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.

மேலும் தற்போது 1373 நாள்களாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தாம் கையளித்த உறவுகளையும், கடத்தப்பட்ட உறவுகளையும், கடலிலே காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளையும் தம்மிடம் மீளக் கையளிக்குமாறு கேட்டுத் தொடர்ச்சியாக போராடிவருகின்றனர்.

இவ்வாறு தமிழர்களின் தாயகப் பகுதிகளான வட,கிழக்கெங்கும் தமது உறவுகளைக் கேட்டுத் தொடர்ச்சியாக போராடிவரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு இலங்கை அரசோ , அல்லது ஐ.நா சபையோ தீரவினைப் பெற்றுக்கொடுக்க தவறிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும் – என்றார்.

சிறைச்சாலைப் பதற்றம் பற்றி ஆராய ஜனாதிபதி செயலணி!

கொழும்பு, நவ.11

சிறைச்சாலைகளில் நிலவும் பதற்ற நிலை தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி செயலணி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடக பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

மஹர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதலில் 11 பேர் உயிரிழந்தமையுடன், 104 பேர் காயமடைந்திருந்தனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக இதுவரையில் 228 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை
யாழ்நகரில் இயங்கும் நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
தொடர்புகளுக்கு:-
077 307 8799

ஈழத்துச்
சிதம்பரத் யாத்திரை - 06

யாழ்ப்பாணத்துச் சித்தர் யோகர் தரிசித்த திருத்தலம்

வே.வரதசுந்தரம்

‘சும்மா இரு’
‘முழுவதும் உண்மை’
‘ஒரு பொல்லாப்பும் இல்லை’
‘யாம் அறியோம்’
‘எப்பவோ முடிந்த காரியம்’

– இவ்வாறு ஆழமான ஆன்மீக சிந்தனைகளை இலகுவான சொற்றொடர்களில் செலச்சொலவல்ல யாழ்ப்பாணத்துச் சித்தர் யோகர் சுவாமிகள் தரிசித்து, திருவாசகம் பாடிப், பூரித்துத் திளைத்த திருத்தலம் ஈழத்துச் சிதம்பரம் என்றறிந்த மாத்திரத்தே யாத்திரை வந்த சிவனடியார்கள் அப்புண்ணிய பூமியை வீழ்ந்து வீழ்ந்து வணங்குவர்.

சித்தர் யோகர் 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் அம்பலவாணர், சின்னாச்சிப்பிள்ளை தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். அவர் பெயர் சதாசிவம். யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியில் கல்வி பயின்றார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில் செய்தார் என்பதே அப்பெரியாரின் ஆரம்ப வாழ்க்கைச் சுருக்கம்.

யோகர் சுவாமி

ஒருமுறை பாட்டனார் வீட்டுக்கு வந்த யோகர் சுவாமிகள் காரைநகர்ச் சிவன் கோயிற் கிழக்குவீதி வழியே சென்றார். பாட்டனாரும் அவருடன் சென்றார். யானும் பின்தொடர்ந்தேன். இருவரும் கோயில் வாசலில் நின்ற இருப்பை மரத்தடியில் நின்று, சுந்தரேசுவரப் பெருமானை வணங்கினார்கள். அப்போது, கோயில் எஜமானாகிய சி.துரையப்பா என்பவர் அவ்விடத்துக்கு வந்தார். சுவாமிகள் கோயிலைச் சுட்டிக்காட்டி ‘இஃது ஒரு திவ் வியமான ஆலயம். இதனைக் கூத்துக் கொட்டகை ஆக்கிவிடாதீர்கள்’ என்றுசொன்னார்கள்’.

இவரது குரு செல்லப்பா சுவாமிகள். ஒருநாள் கொழும்புத்துறை வாசிகளான இரு முதியவர்கள் விதான் திருஞானசம்பந்தர், துரையப்பா ஆகியோர் இளைஞன் யோகரை செல்லாப்பா சுவாமிகளிடம் அழைத்துச் சென்றனர். இதுவே இவரது முதற்குரு தரிசனம். இளைஞன் யோகரைக் கண்டதும், செல்லப்பா சுவாமிகள் உரத்த குரலில் அதட்டினார். அவரது உரத்த தொனியைக் கேட்ட மாத்திரத்தே, அந்த இடத்திலேயே, அந்த நிமிடமே, இளைஞர் யோகர் ஞானம் பெற்றார். இவ்வனுபவத்தை உணர்வு பூர்வமாக யோகர் கூறுகிறார். கேளுங்கள்:

‘யாரடா நீ என்று அதட்டினான்
அன்றே பெற்றேன் அருள்’

செல்லப்பா சுவாமிகள் நாடிய நல்லைக் கந்தன் தேரடியே அக்காலத்தில் இவருக்குத் தஞ்சமாக இருந்தது. ஒருநாள் செல்லப்பா சுவாமிகள் ’இரு யானைகள் ஒரு தறியில் வாழல் கூடுமோ’ என்று கூற, 1910 இல் இவர் தனது ’கதிர்காம யாத்திரையை’ ஆரம்பித்தார். யோகரின் ஆரம்ப ஆன்மீக வாழ்க்கையில், நல்லைக் கந்தன் தேரடி பாரிய முக்கியத்துவம் பெறுகிறது. இதனைத் தொடர்ந்து, யோகர் நல்லூரான் தேரடியைப் பிரிந்து, கொழும்புத்துறை இலுப்பையடி புக்கார். அவ்வாறு செல்கையில், தனது குருநாதரின் ’பாதச்சுவடுகளை’ கரிசனையுடன் எடுத்துச் சென்றார். தனது வாழ்வில் எப்போதும் குருநாதரின் பாதுகைளுக்கு வணக்கஞ் செலுத்துவார்.

யோகர் சுவாமிளுக்குப் பல சீடர்கள் நாடெங்கும் இருந்தனர். அவர்களுள் மார்க்கண்டு சுவாமிகள், சிவாய சுப்பிரமணிய சுவாமிகள், சாந்த சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள், ஜேர்மன் சுவாமிகள், நரிக்குட்டி சுவாமிகள், சந்திரபாலா சுவாமிகள் பிரபல்யமானவர்கள். 1964 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை யோகர் சுவாமிகள் சமாதி அடைந்தார்.


செல்லப்பா சுவாமி

இவ்வாறு, யாழப்பாணத்துச் சித்தர் யோகரின் வாழ்க்கை பற்றி நன்கறிந்த சிவனடியார்கள், அவருக்கும் இத்தலத்துக்கும் இடையே நிலவிய தொடர்பினை அறிவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

1920களின் முற்பகுதியில் காரைநகரில் அஞ்சல் அலுவலக அதிபராக இருந்த சபா.நடேசன் என்பாரின் இல்லத்தில் யோகர் சுவாமி அடிக்கடி வந்து தங்கி ஈழத்துச் சிதம்பரத்தைத் தரிசித்து இருக்கிறார். சிவாச்சாரியார் வைத்தீஸ்வரக் குருக்களின் பாட்டனார் செல்லக்குருக்கள் என்று அழைக்கப்பட்ட சரவணபவக் குருக்களுடன் யோகர் சுவாமிகளுக்குப் பண்டைய நல்வினைப் பயனால் மிக்க தொடர்பு ஏற்பட்டது. இவர்களின் ஆன்மீக உறவுபற்றி சிவாச்சரியார் வைத்தீஸ்வரக் குருக்கள் கூறுவதை இவர்கள் அறிகிறார்கள்:-

’பாட்டனார் ஓர் உள்ளத் துறவி. ஆன்மீகவிடயங்களில் அதிக நாட்டம் உள்ளவர். புராண இதிகாசங்களிலும், சைவ நூல்களிலும் மிகுந்த தேர்ச்சிஉடையவர். காரைநகரில் யோகர் சுவாமிகள் தங்கியிருந்த காலங்களில் பாட்டனார் அவரிடம் சென்று உரையாடிவருவது வழக்கம். காரைநகர்ச் சிவன் கோயில் வடக்கு ரத வீதிக்கு அண்மையில் உள்ள வீடே பாட்டனாரின் வாசஸ்தலமாக அமைந்திருந்தது. அந்த வீட்டில் என் தகப்பனார், தாயார், உடன் பிறந்தார் முதலானோர் இருந்தனர். யானும் அங்கிருந்தேன்.

கொழும்புத்துறை ஆச்சிரம்

சிலநாள்களில், காலை நேரங்களில் சுவாமிகள் பாட்டனாரின் வீட்டுக்கு வருவார்கள். தலைவாசலில் பாட்டனாரும், சுவாமிகளும் எதிர் எதிரேயிருந்து, கர்ப்பூரங் கொளுத்திவிட்டுப் பாட்டுப் படிப்பார்கள். இவர்கள் படித்தது திருவாசகம் என்பதைப் பின்னர் அறிந்து கொண்டேன். பாட்டனாருக்குத் திருவாசகத்தில் நிறைய ஈடுபாடுண்டு. அவர் தம்மை மறந்து இனிமையாகப் பாடுவார். திருவாசக பாராயணம் காலையில் மட்டும் இரண்டு, மூன்று நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். பாராயணம் முடிந்ததும் உரையாடல் ஆரம்பமாகும். தகப்பனார் சமஸ்கிருத சுலோகங்கள் சிலவற்றையும் சொல்லுவார். எனக்கு எதுவுமே புரிவதில்லை. சிதம்பர சக்கரத்தைப் பேய்பார்த்த நிலையிலே நானிருப்பேன்.

ஒருநாள் திருவாசக பாராயணம் முடிந்ததும் யான் தாயாரை அணுகித் தாடிவளர்த்த கிழவர் யாரென்றும் எதனைப் பாராயணஞ் செய்தனர் என்றும் கேட்டேன். அவர் தாடிவளர்த்த கிழவர் யோகர் சுவாமிகள் என்றும், அவர்கள் பாராயணஞ் செய்தது திருவாசகத்திலுள்ள திருச்சதகம் என்றும் கூறினார்.

ஒருமுறை பாட்டனார் வீட்டுக்கு வந்த யோகர் சுவாமிகள் காரைநகர்ச் சிவன் கோயிற் கிழக்குவீதி வழியே சென்றார். பாட்டனாரும் அவருடன் சென்றார். யானும் பின்தொடர்ந்தேன். இருவரும் கோயில் வாசலில் நின்ற இருப்பை மரத்தடியில் நின்று, சுந்தரேசுவரப் பெருமானை வணங்கினார்கள். அப்போது, கோயில் எஜமானாகிய சி.துரையப்பா என்பவர் அவ்விடத்துக்கு வந்தார். சுவாமிகள் கோயிலைச் சுட்டிக்காட்டி ‘இஃது ஒரு திவ்வியமான ஆலயம். இதனைக் கூத்துக் கொட்டகை ஆக்கிவிடாதீர்கள்’ என்றுசொன்னார்கள்’.

காரைநகர் மணிவாசகர் சபை ஆரம்பமாவதற்கு யோகர் சுவாமிகளின் ஆசி கிடைத்தது. மணிவாசகர் சபையினை ஈழத்துச் சிதம்பரத்தில் உருவாக்கிச் சமயப் பணிகள் ஆற்ற வேண்டும் என்னும் அவா வைத்தீஸ்வரக் குருக்களிடம் துளிர்விட்டதும் அவர் யோகர் சுவாமிகளிடஞ் சென்று அவரது ஆசியினைக் கோரினார். யோகர் சுவாமிகள் தனது ஆசியை வழங்கிப் பின்வரும் திருவாசகப் பாடலைப் பாடினார்.

வேண்டத் தக்கதறிவோய் நீ
வேண்டமுழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாதருள் செய்தாய்
யானும் அதுவேவேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே!

இவற்றை அறிந்து உவகை அடைந்த அடியார்கள் சிவயோக சுவாமிகள் சிவதொண்டு பற்றிய பாடல்களைச் சிந்திக்கின்றனர்:-

சிவதொண்டு செய்வார்க்குச் சீலமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தை தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவாரோ தீநெறியில்
சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்.

(தொடரும்...)

எங்கே எங்கள் சொந்தங்கள்? ராஜபக்ஷ அரசே பதில் சொல்!

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமிழர் தாயகத்தில் கண்ணீருடன் போராட்டம்

சர்வதேச மனித உரிமைகள் தினம் - 202
மறைக்கப்பட்ட
மனிதர்கள் எங்கே?

(நமது வடக்கு, கிழக்கு நிருபர்கள்)

கொழும்பு, டிசெம்பர் 10

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று கவனயீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அரச படைகளின் பலத்த கெடுபிடிகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன.

கொரோனாத் தொற்று அபாயம் காரணமாக சமூக இடைவெளி, முகக்கவசங்களை அணிந்தவாறே போராட்டத்தில் உறவினர்கள் பங்கேற்றனர்.

இதன்போது கதறியழுத உறவுகள், ஐ.நாவே! சர்வதேச சமூகமே!! காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொண்டு உண்மைகளை வெளிப்படுத்துங்கள்!!! உண்மைகளைக் கண்டறிந்து சொல்லாவிட்டால் நாங்களே தற்கொலை செய்வோம்; இல்லையென்றால் எங்கள் மீது குண்டுகளைப் போட்டுக் கொலை செய்துவிடுங்கள்!!!! - என்று கோஷமிட்டனர்.

அத்துடன், எங்கே எங்கள் சொந்தங்கள்? ராஜபக்ஷ அரசே பதில் சொல்?, மறைக்கப்பட்ட மனிதர்கள் எங்கே?, வேண்டும் வேண்டும் எமக்கான உரிமை வேண்டும், தண்டிக்க வேண்டும் தண்டிக்க வேண்டும் மனித உரிமை மீறலைத் தண்டிக்க வேண்டும், ஏற்று ஏற்று சர்வதேசமே குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்று, வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், எமது உறவுகளுக்கு நடந்த அநீதிக்கு நீதி கிடைக்கும் வரை போராடுவோம், மறுக்காதே மறுக்காதே எங்கள் உரிமைகளை மறுக்காதே, இராணுவத்தின் கெடுபிடிகளை உடன் நிறுத்து, எங்கே எங்கே இராணுவத்தின் கையில் ஒப்படைக்கப்பட்ட எங்கள் பிள்ளைகள் எங்கே? போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டங்களின் நிறைவில் அந்தந்த மாவட்டங்களில் உரிய அதிகாரிகளிடம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கான மகஜரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கையளிக்கப்பட்டன.

அந்த மகஜரில், போர் முடிவுற்று 11 வருடங்கள் கடந்துள்ளபோதும், இன்னும் எமது உறவுகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கபெறவில்லை. காலம் தாழ்த்தாது காணாமல் ஆக்கப் பட்டோருக்கான நீதியை சர்வதேச விசாரணை மூலம் பெற்றுக்கொடுங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பஸ்ஸில் வந்திறங்கிய 33 யாசகர்கள் மன்னாரில் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.10

மன்னார்மாவட்டத்திற்குயாசகம் எடுக்கும் நோக்கில் வெளி மாவட்டங்களில் இருந்து பஸ்ஸில் வந்திறங்கிய 33 யாசகர்கள் மடக்கிப்பிடிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்

மகியங்கனை, புத்தளம், பொலனறுவை உள்ளிட்ட பகுதிகளில் இருந்துவாராந்தம்வியாழக்கிழமைகளில் மன்னார் நகர கடைகளில் யாசகம் பெறும் நோக்கில் அதிகளவானோர் மன்னார்

நகரிற்கு வருகை தந்து சகல வர்த்தக நிலையங்களிற்கும் ஏறி இறங்குவதனால் கொரோனா பரவலாம் என்ற அச்சம் மாவட்டச் செயலகத்தில் கொரோனாத் தடுப்புத் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டில் நிலவும் கொரோனா அச்சம் தணியும் வரையில் இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானத்திற்கு ஏற்பவே இன்றைய தினம் மன்னார் நகரிற்கு பஸ்ஸில் வந்து இறங்கிய யாசகர்கள் அனைவரும் அறிவுறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்த நடவடிக்கையில் பொலிஸார், பொதுச் சுகாதார உத்தியோகத்தர், பிரதேச செயலாளர், கிராம சேவகர் எனப் பலரும் இணைந்து ஈடுபட்டனர்.

கடல் வழியாக இந்தியாவுக்கு தப்பி ஓட முயன்றவர் பருத்தித்துறையில் கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.11

திருகோணமலையில் இரட்டைக் கொலை புரிந்தார் என வழக்கு விசாரணையை எதிர்நோக்கும்ஒருவர்கடல்வழியாகஇந்தியாவிற்குத் தப்பிச் செல்ல முற்பட்ட சமயம் இன்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையை சேர்ந்த நவரத்தினராசா குகனேஸ்வரன் என்பவரே பருத்தித்துறைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் இரட்டைக் கொலை புரிந்தமைக்கான வழக்கு இடம்பெறும் நிலையில்தண்டனையில்இருந்துதப்பிக்கும்நோக்கில் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் பருத்தித் துறைப் பகுதியில் ஓர் படகு ஓட்டியின் உதவியுடன் அவர் இந்தியாவிற்குத் தப்பிச் செல்லத் திட்டமிட்டார் எனக் கூறப்படுகின்றது.

அதற்காகப் படகில் ஏறிப் பயணித்த நேரம் கடலில் சுற்று ரோந்து நடவடிக்கையில் இருந்த கடற்படையினர் இதனை அவதானித்துள்ளனர். கடற்படையினர் நெருங்கி வருவதனை அவதானித்த படகு ஓட்டி கரைநோக்கித் தப்பி ஓடியுள்ளார். இதனால் கரையோரம் நின்ற கடற்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதன்போது கரையை அடைந்த கடற்படையினர் படகு ஓட்டியையும் இந்தியாவிற்குத் தப்பிச் செல்ல முயன்றவரையும் கைது செய்துள்ளனர்.

இதன்போது இலங்கை, இந்திய நாணயங்கள், படகு, இயந்திரம் என்பனவும் சான்றுப் பொருள்களாகக் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு கைப்பற்றப்பட்டவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

வவுனியாவில் 1,392 ஆவது நாளாகத் தொடர்கிறது காணாமல்போன உறவுகளைத் தேடும் போராட்டம்

(வவுனியா நிருபர்)

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக சுழற்சி முறையில் 1,392 ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று பிற்பகல் நடைபெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று, தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு - கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் சங்கத்தினரால் வவுனியா நகர சபை முன்றலில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகரசபை முன்றலில் ஐரோப்பிய, அமெரிக்கக் கொடிகளை ஏந்தியவாறும் ஆரம்பமான இந்தக் கவனயீர்ப்புப் பேரணியானது பூங்கா வீதியூடாக ஏ -9 வீதியை வந்தடைந்து 1,392ஆவது நாளாகக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் கொட்டகையில் முடிவடைந்தது. அவ்விடத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்திலும் உறவினர்கள் ஈடுபட்டனர். (100)

வெள்ளக்குழியில் விழுந்தவர் சாவு!

துன்னாலையில் துயரம்

(எஸ்.நிதர்ஷன்)

மழை நிரம்பிய வெள்ளக்குழியில் தவறு தலாக விழுந்த நபர் ஒருவர் உயிரிழந்த நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

யாழ்., வடமராட்சி, துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் மழை வெள்ளத்தில் வீதியோரமாகச் சென்ற வேளை அருகிலிருந்த குழியினுள் தவறுதலாக விழுந்துள்ளார்.

வீட்டிலிருந்து சென்றவரைக் காணாத உறவினர்கள், அவரைத் தேடியபோது வெள்ளத்தில் சடலமாகக் கிடப்பதைக் கண்டனர். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ் அகராதியும் யாழ்ப்பாண வழக்குச் சொல் அகராதியும்

மைதிலி தயாநிதி

இக்கட்டுரை கொழும்பு குமரன் புத்தக இல்லத்தினால் 2019ம் ஆண்டு வெளியிடப்பட்ட தீவகம் புளியங்கூடலைச் சேர்ந்த நடராஜா சிறிரஞ்சன் அவர்களால் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் அகராதி, யாழ்ப்பாண வழக்குச்சொல் அகராதி தொகுதி 1 எனும் இரு அகராதிகள் பற்றியதாகும்.

நிறுவன ஆதரவு ஏதுமின்றி இத்தகையதொரு பெரும் அறிவுசார் முயற்சியை மேற்கொண்ட சிறிரஞ்சன் எம் பாராட்டுதலுக்குரியவர்.

யாழ்ப்பாணத் தமிழகராதியானது யாழ்ப் பாணக்குடாநாட்டில் வழக்கில் உள்ளனவும், முன்னர் வழங்கி வந்தனவுமான சொற்கள், சொற்தொடர்கள் என ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பதிவுகளைக் கொண்டதாக விளங்க, யாழ்ப்பாண வழக்குச் சொல்லகராதி (தொகுதி 1) பெரும்பாலும், முன்னதில் காணப்படும் ‘அ’ முதல் ‘ச’ வரையுள்ள சொற்களை மட்டும் உள்ளடக்கியுள்ளதுடன், அப்பதங்களுக்கு இலக்கண ரீதியான வரைவிலக்கணங்களையும் கொடுக்கின்றது.

எனவே, யாழ்ப்பாணத் தமிழகராதியை மூல அகராதி என்றும், யாழ்ப்பாண வழக்குச்சொல் அகராதியை அதனின்றும் தோன்றிய, இலக்கண அடையாளங்களால் செம்மைப்படுத்தப்பட்ட அகராதி என்றும் கூறலாம். இவையிரண்டுமே ஒரு மொழி அகராதிகளாகும் (தமிழ் - தமிழ்). அதாவது, தமிழ்த் தலைப்புச் சொற்களுக்குத் தமிழ் மொழியில் மட்டும் விளக்கம் அளிப்பவை.

தமிழ் அகராதி உருவாக்க வரலாற்றில் யாழ்ப்பாணத்தவரின் பங்கு கணிசமானது என்பதை இவ்விடத்தில் குறிப்பிடாதிருக்க முடியாது. 1842ல் ரெவரண்ட். லெவிஸ் போநீடிங்கினால் மானிப்பாய் அமெரிக்க மின் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளி யிடப்பட்ட சந்திரசேகர பண்டிதரின் **Thf Manual Dictionary of thf Tamil Language** என்பது, 1732இல் எழுந்த வீரமாமுனிவரின் சதுரகராதி எனும் ஒரு மொழி அகராதியின் பின்னர் தோன்றிய முதல் தமிழ் அகராதி எனும் பெருமையுடையது. இது யாழ்ப்பாண அகராதி அல்லது மானிப்பாய் அகராதி என்றும் அழைக்கப்படும் சதுரகராதியை விட நான்கு மடங்கு பெரியதான இது 58,500 சொற்களை உள்ளடக்கியது. இதன் பின்னர் தோன்றிய ஒரு மொழி அகராதிகள் யாழ்ப்பாணம் நா.கதிரவேற்பிள்ளையின் தமிழ்ப் பேரகராதி (1899), வைமன் கு.கதிரவேற்பிள்ளையின் தமிழ்ச் சொல் அகராதி அல்லது தமிழ்ச்சங்க அகராதி (1904) என்பவையாகும். மேற்கூறப்பட்டவை பெரிதும் எழுத்து வழக்கை மட்டும் ஒட்டியனவாக அமைய, சிறிரஞ்சனின் ஒரு மொழி அகராதிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கே உரிய சிறப்பான பேச்சுமொழி வழக்குகளை அறிவிக்கும் கருவிகளாக விளங்குகின்றன.

பேச்சு மொழிக்குக்கெனத் தனி அகராதிகள் தோன்றியமை தமிழ் மொழி அகராதி வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல் ஆகும். பேச்சுவழக்கானது இடம், சாதி, வர்க்கம் என்பவற்றுக்கேற்ப வேறுபடும். குறிப்பிட்ட பிரதேசத்திற்குரித்தான சிறப்பு வழக்குகளை வட்டார வழக்கு என்று கூறுவதுண்டு. அவ்வகையில் தமிழில் வட்டார வழக்கு அகராதியின் முன்னோடியாகக் கருதப்படுபவர் எழுத்தாளர் கி. ராஜநாராயணன் ஆவர். அவர் 1982ல் வெளியிட்ட கரிசல் வட்டார வழக்கு அகராதியைத் தொடர்ந்து பல வட்டார வழக்கு அகராதிகள் (செட்டிநாட்டு வழக்கு அகராதி, நாஞ்சில் நாட்டுச் சொல்லகராதி, நடுநாட்டு வழக்கு அகராதி, நெல்லை வட்டார வழக்கு அகராதி, கொங்கு வட்டார வழக்கு அகராதி, தஞ்சை வட்டார வழக்கு அகராதி முதலானவை) தமிழகத்தில் எழுந்தன. 1984இல் ஈழத்துப் பூராடனார் மட்டக்களப்புப் பிரதேச வழக்குச் சொற்கள், சொற்றொடர்களினதும் பழமொழிகளினதும் அகராதி எனும் நூலை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. தற்பொழுது சிறிரஞ்சனின் இரு அகராதிகளும் இவ்வகராதிகள் வரிசையில் இணைந்து கொள்கின்றன.

இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களில் வழங்கும் பேச்சு வழக்கின் இயல்புகள் குறித்த ஆய்வில் புலமையாளர்கள்1940கள்தொடக்கம் ஆர்வம் காட்டிவந்துள்ளனர். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் ‘நானாடகம்’ எனும் நாடக நூலில் இடம்பெறும் யாழ்ப்பாண வழக்கினை ஆராயும் விபுலானந்த அடிகளின் ‘ஈழமண்டலத் தமிழும், சோழமண்டலத் தமிழும்’ எனும் கட்டுரையே (1941) இத்தகைய ஆய்வுகளுக்குத் தொடக்கப்புள்ளியாக அமைந்தது எனலாம். இவரைத் தொடர்ந்து எவ்.எக்ஸ்.சி.நடராஜா, க.கணபதிப்பிள்ளை, கமில் சுவலபில், மு.சண்முகம் பிள்ளை, ச.தனஞ்சயராசிங்கம், அ.சண்முகதாஸ், சு.சுசீந்திரராஜா போன்றோர் யாழ்ப்பாணப் பேச்சுவழக்குத் தொடர்பான கட்டுரைகளை எழுதினர் எனினும், யாழ்ப்பாணப்பேச்சு மொழியின் ஒலியியல், சொல்வடிவமைப்பியல் என்பன ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அளவிற்கு, சொல்லடைவு, மரபு மொழித் தொடர்கள் என்பன **(vocabulary an iioms)** ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை என்றே கூறல் வேண்டும். சொல்லடைவு ஆய்வுக்கு உறுதுணையாக விளங்கவல்ல பேச்சு வழக்கு அகராதிகள் இல்லாத பெருங்குறையை ஸ்ரீரஞ்சனின் அகராதிகள் தீர்த்து வைக்கின்றன.

1960களின் பின்னரே எழுத்தாளர்கள் இலங்கைப் படைப்பிலக்கியத்தில் பிரக்ஞை பூர்வமாகப் பேச்சு வழக்கினைக் கையாளத் தொடங்கினர் என்பதையும், பேச்சு மொழி படைப்பிலக்கியத்தில் அங்கீகாரம் பெறுவதற்கு நீண்ட காலம் போராட வேண்டி இருந்ததையும் இவ்வமையத்தில் நினைவு கூரல் வேண்டும். இது குறித்து சி. வன்னியசிங்கம் ஈழத்துப் புனைகதைகளில் பேச்சுவழக்கு எனும் தனது நூலின் இரண்டாம் அத்தியாயத்தில் விரிவாக ஆராய்ந்துள்ளார். அத்தகையதொரு மரபுப் போராட்ட வரலாற்றின் பின்னணியில் பார்க்கும்போது, யாழ்ப்பாணப் பேச்சு வழக்கினை ஆதாரமாகக் கொண்டு அகராதி எழுந்தமை என்பது படைப்பிலக்கிய கர்த்தாக்களுக்குக் கிடைத்த பெருவெற்றி என்றே கூறல் வேண்டும். படைப்பிலக்கியச் சொல்லாடல்களைப் புரிந்து கொள்வதற்கு இவ்வகராதிகள் துணைபுரியும். எடுத்துக்காட்டாக. ‘மானிடவியல் நாவலாசிரியர்’ என்று அ. சண்முகதாஸினால் வர்ணிக்கப்பட்ட கே. டானியலின் நாவல்களில் இடம்பெறும் சொற்களை விளங்கிக் கொள்வதற்கு இவை பெரும்பாலும் உதவும்.





மேலும், கருத்துப்பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்படும் மொழியானது, சமூக, பண்பாட்டு வரலாற்றின் மூலமாகவும் திகழ்கிறது. இடப்பெயர்வு, புலப்பெயர்வு, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, தொழிற்துறைகள் எந்திரமயமாதல், உலகமயமாக்கம், நவீனகல்வி முறைமை, மேனோக்கிய சமூக அசைவியக்கம் காரணமாகச் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களினால் பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் அருகிப்போவதற்கும், வழக்கிறந்து போவதற்கும், மறக்கப்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அவ்வகையில், யாழ்ப்பாணத்தில் புழங்கியனவும், புழங்குவனவுமான சொற்களைப் பதிவு செய்யும் இவ்வகராதிகள் காலத்தின் தேவையாகவும் உள்ளன.

யாழ்ப்பாணத் தமிழ் அகராதி அமைப்பு:

அகரவரிசையில் அமைந்த யாழ்ப்பாணத் தமிழ் அகராதியில் கொடுக்கப்பட்ட சொற் பதிவுகளில் மூன்று முக்கிய கூறுகள் உண்டு. இவை ஆசிரியர் சொல் சேகரித்தல், சொற்பொருள் நிர்ணயித்தல், விளக்க உதாரணம் தருதல் எனும் மூன்று செயற்பாடுகளின் கவனம் செலுத்தியுள்ளமையை உணர்த்துகின்றன. அதாவது, எல்லாப் பதிவுகளிலும் தலைப்புச்சொல் அல்லது சொற்றொடரைக் கொடுத்து, அதற்கு வரை விலக்கணம், எடுத்துக்காட்டு வாக்கியம் என்பவற்றைத் தந்துள்ளார்.

எடுத்துக்காட்டு (1):

கமல குண்டலமாக (தலைப்புச் சொல்). தலைகீழாக, தாறுமாறாக. (சொற்பொருள் விளக்கம்). அவக்கெண்டு தேரை இழுத்து விட்டுட்டினம். குருக்கள் கமல குண்டலமாக விழப் பார்த்தார். நல்லகாலம் பக்கத்தில் நிண்ட ஐயர் தாங்கிப் பிடிச்சிட்டார் (உதாரண வாக்கியம்).

எடுத்துக்காட்டு (2):

ஒண்டு பாதி: 1. சில, சிறிதளவு. உ+ம். கடும் மழையால புகையிலைக் கண்டுகள் ஒண்டு பாதிதான் தப்பிச்சுது. 2. நேரம் தாழ்த்தி. நடுச்சாமத்துக்கு மேல். உ+ம். அவர் வீட்ட வந்து சேர ஒண்டுபாதி செண்டாலும் செல்லும்.

மேலும் அவ்வப்போது தகுந்த இடங்களில் பதிவுகளின் இயல்பினை, குழந்தை மொழி, அருகிவரும் மொழி, போர்க் காலச் சொல், வழக்கிறந்த சொல் என இன்னும் வெவ்வேறு வகையினதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

எடுத்துக்காட்டு:

கன்னக்குடுமியர்: கன்னத்தில் குடுமி கட்டும் வழக்கத்தைக் கொண்டிருந்த ஆண்களைக் குறிக்கும் முறை (வழக்கொழிந்த சொல்).

சில சொற்களை எவ்வெப் பொருளில், எச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்தல் வேண்டும் என்பதைக் காட்டுமுகமாக, ஏசற்குறிப்பு, சலிப்புக்குறிப்பு, கேலிக்குறிப்பு, இகழ்ச்சிக்குறிப்பு எனும் குறிப்புகளும் தந்துள்ளார்.

எடுத்துக்காட்டு:

பழசு - வயதானவர். (கேலிக்குறிப்பு). உ+ம். இந்தப் பழசுகளோட காலம் தள்ளுறது சரியான கஸ்ரம்.

யாழ்ப்பாணச் சொற்களுக்கு ஒத்த தமிழக வழக்கினையும் இடையிடையே குறிப்பிடும் அவர் ஒத்த கருத்துள்ள சொற்களையும், தேவையான இடங்களில் மேலதிக விளக்கத்திற்காக ஆங்கிலச் சொற்களையும் தந்துள்ளார்.

எடுத்துக்காட்டு (1): கூப்பன் மா+ கோதுமை மா, **blfachf whilf flour**. கூப்பன் மாவில ரொட்டி சுட்டனாங்க. ஒத்தசொற்கள்: அமெரிக்கன் மா, கோதம்ப மா.

எடுத்துக்காட்டு (2):

கறுப்பி கொடியேறுதல்: பனையிலிருந்துகள் இறக்கும் காலமான பங்குனி மாத ஆரம்பம். கறுப்பி கொடியேறினாக் குடிகாறருக்குக் கொண்டாட்டம். ஒத்த சொல். பனை கொடியேறுதல்.

மிக அவசியமான இடங்களில் மட்டும் உச்சரிப்பு முறையைக் காட்டியுள்ளார்.

எடுத்துக்காட்டு: (கு) பஸ் பண்ணுதல் **making fuss** ஒன்றைச் செய்ய விருப்பமிருந்தும் தற்பெருமைக்காகச் செய்யாமல் பொய்க்காரணங்கள் கூறல். உ+ம்:- சும்மா பஸ் பண்ணாம வாரும். சாப்பிடுவம்.

அமரர் பேராசிரியர் சுசீந்திரராஜாவின் மேற்பார்வையில் உருவான யாழ்ப்பாண வழக்குச் சொல் அகராதி தொகுதி ஒன்றின் சிறப்பியல்பு அதில் இடம்பெறும் ஒவ்வொரு பதிவுக்கும் இலக்கணக்குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளமையாகும். அதாவது பெயர், வினை, பெயரைடை, வினையடை அல்லது மரபுத்தொடர் எனும் இலக்கண ரீதியான அடையாளங்கள் ஒவ்வொரு பதிவுக்கும் இடப்பட்டுள்ளன.

அதேசமயம் யாழ்ப்பாணத் தமிழகராதிக்கும், யாழ்ப்பாண வழக்குத் தமிழகராதிக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் சில உண்டு. எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணத் தமிழ் அகராதியில் உள்ள எல்லாச் சொற்களுமே யாழ்ப்பாண வழக்குச்சொல் அகராதியில் சேர்க்கப்படவில்லை என்று தெரிகிறது. உதாரணமாக -

யாழ்ப்பாணத் தமிழ் அகராதியில் காணப்படும் அக்காத்தை, அங்கிடுதத்தி, அடக்க ஒடுக்கம் என்ற சொற்கள்/சொற்தொடர்கள் யாழ்ப்பாண வழக்குச் சொல்லகராதியில் சேர்க்கப்படவில்லை. அதே சமயம், யாழ்ப்பாணத் தமிழகராதியில் இடம் பெறாத அக்கம்பக்கத்தார். அக்காச்சி, அகதி, அகவணக்கம், அகால மரணம் முதலான சொற்கள் பின்னர் உருவான யாழ்ப்பாண வழக்குச்சொல் அகராதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்கது.

இரு அகராதிகளும் உச்சரிப்பு முறையில் வித்தியாசம் காட்டுகின்றன.

யாழ்ப்பாணத் தமிழ் அகராதிப் பதிவுகள் - அக்காக்காறி, அங்கதான், உதைக்குது, கமக்காறன் என்று யாழ்ப்பாணப் பேச்சு மொழியில் அமைந்துள்ளன. ஆனால், யாழ்ப்பாண வழக்குச் சொல்லகராதிப் பதிவுகள் அக்காக்காரி, அங்கைதான், உதைக்குது, கமக்காரன் என்று காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத் தமிழகராதியில் பேச்சுத் தமிழிலேயே உதாரண வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாண வழக்குச் சொல்லகராதியில் பேச்சு மொழியின் பயன்பாடு உதாரண வாக்கியங்களிற் தவிர்க்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(10ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு போதுமான நிதி கிடைக்கவில்லை!

சித்தார்த்தன் எம்.பி. குற்றச்சாட்டு

வரவு - செலவு திட்டத்தில் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படாமல் இருக்கின்றது. அதே போன்று 25 வருடங்களாக இடம்பெற்று வந்த மீள்குடியேற்ற அமைச்சு இம்முறை இல்லை. அதனால் மீள்குடியேற்றப் பிரச்சினைக்குப் பாதிப்பு ஏற்படும் என எஸ். சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தின் இறுதிநாளில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

வீடமைப்பு திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகள் பல இன்னும் பூரணப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அவற்றையும் பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் வடக்கில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநாடுகளில் கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர்கள் இருக்கின்றனர். அரசாங்கத்தின் பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்புக்களின் போது வெளிநாட்டு பட்டதாரிகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாகவும் கவனம் செலுத்தி அந்த பட்டதாரிகளையும் அரசாங்கம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வழங்கும் தொழில்வாய்ப்பில் இணைத்துக்கொள்ள வேண்டும். - என்றார்.

சட்டமா அதிபர் திணைக்கள விடுதி திறந்து வைக்கப்பட்டது

சட்டமா அதிபர் திணைக்களத்துக்கான உத்தியோக விடுதி நேற்று (வியாழக்கிழமை) வவுனியா ஈரப் பெரிய குளம் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில் கட்டடப்பணிகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் இந்தக் கட்டடம் தற்போதைய அரசாங்கத்தின் பங்களிப்போடு இராணுவத்தினரின் நிர் மாணிப்பு பணியில் கட்டப்பட்டிருந்தது.

வட மாகாணத்துக்கான சட்டமா அதிபர் திணைக்கள விடுதியாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தை சட்டமா அதிபர் தபேர டி லிபேரா உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதன்போது சட்டமா அதிபர் திணைக்கள நிர்வாக பிரிவு அதிகாரி உட்பட சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், நீதிபதிகள், வவுனியா அரசாங்க அதிபர் வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

பண்டிகைக் காலத்தில் மக்களுக்கான வழிகாட்டல்

பண்டிகை காலங்களில் பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், பண்டிகை காலங்களில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு அவற்றைப் பின்பற்றுமாறு சுகாதார பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

பண்டிகை காலங்களில் பயணத்தை குறைக்க பொதுமக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குடும்பத்தில் ஒருவர் மாத்திரம் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை உறுதி செய்யவும்.

அருகிலுள்ள வர்த்தக நிலையங்களில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

பண்டிகை காலங்களில் குடும்பம் அல்லது நட்பு கூட்டங்களில் இருந்து விலகி இருக்கவேண்டும் என்பதுடன், அத்தகைய கூட்டங்களை உடனடி குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுப்படுத்தவும்.

பண்டிகை காலத்துக்காக ஏனையவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும்போது உடல் ரீதியான தொடர்பிலிருந்து விலகி இருக்கவும் அனைத்து நேரங்களிலும் சமூக தூரத்தை பராமரிக்கவும்.

வயதானவர்கள் வேகமாக நோய்த் தொற்றுக்கு ஆளாக நேரிடும் என்று கூறிய சுகாதார பணிப்பாளர், குடும்பங்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள பெரியவர்களை பெரிய கூட்டத்துக்கு வெளிப்படுத்துவதைத் தவிர்க்கவும். இந்த காலகட்டத்தில் வெளிநபர்களின் வருகையை மட்டுடுத்தவும்.

தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, பொது இடங்களில் சமூக தூரத்தை பராமரிக்கத் தவறும் நபர்களுக்கு அல்லது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறும் நபர்களுக்கு சமூக இடைவெளியை பின்பற்றுமாறு வலியுறுத்த பொதுமக்களுக்கு உரிமை உண்டு.

பண்டிகைக் காலங்களில் பொருள்களை வாங்குவதற்குக் கிடைக்கக்கூடிய ஒன்லைன் விநியோக சேவைகளைப் பயன்படுத்தவும்.

இந்தக் காலகட்டத்தில் வெளிச்செல்லும் போது முகக் கவசம் அணியவும். சமூக தூரத்தை பராமரிக்கவும். தொடர்ந்து கைகளை கழுவவும் அல்லது சுத்தப்படுத்தவும்.

யாழ்ப்பாணத் தமிழ் அகராதியும் ...

யாழ்ப்பாணத் தமிழ் அகராதி
Dictionary of Jaffna Dialect
தமிழ் - தமிழ்

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கத்துவம்:

அங்கத்தவரைக் கொண்டுவிச்சு நெசவாலைக்குப் புதுத் தறி போடுவிச்சனாங்க. (யாழ்ப்பாணத் தமிழ் அகராதி). அங்கத்துவம் இல்லாமல் நூலகத்தில் புத்தகம் எடுக்க முடியாது (யாழ்ப்பாண வழக்குச் சொல்லகராதி). அச்சாவாரம் (முற்பணம்) விலைபேசி அச்சவாரமும் குடுத்திட்டன். (யாழ்ப்பாணத் தமிழ் அகராதி). விலைபேசி அச்சவாரமும் வாங்கி விட் டோம். (யாழ்ப்பாண வழக்குச் சொல்லகராதி).

அச்சறுக்கை (பாதுகாப்பாக) நல்ல அச்சறுக்கையா வேலி அடைச்சிருக்கினம். (யாழ்ப்பாணத் தமிழ் அகராதி). தோட்டத்தைச் சுற்றிவேலி அடைத்தால் அச்சறுக்கையாக இருக்கும். (யாழ்ப்பாண வழக்குச் சொல்லகராதி).

யாழ்ப்பாண வழக்குச் சொல்லகராதியில் பேச்சு வழக்குச் சொல்லுக்கு பேச்சு மொழியில் எடுத்துக்காட்டுதரப்படவில்லை. உதாரணமாக 'அங்கதை யாலை' என்ற பேச்சுவழக்குச் சொல்லுக்கு உதாரண வாக்கியமாக 'அங்கத் தையாலை எங்கே போகிறீர்கள்?' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாக்கியம் 'அங்கத்தையாலை எங்க போறியள்?' என்றிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

பொதுவாகப் பார்க்கும்போது, பேராசிரியர் சுசீந்திரராஜாவின் மேற்பார்வையில் உருவான யாழ்ப்பாண வழக்குச் சொல்லகராதியில் பேச்சுமொழியைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன போல் தெரிகிறது. எழுத்துவழக்கில் எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்படுவது, யாழ்ப்பாணத்தவரல்லாதார் குறிப்பாகத் தமிழகத்தார் யாழ்ப்பாண வழக்கினைப் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் எனும் எண்ணத்தின் அடிப்படையில் இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். எனினும், அத்தகைய செயற்பாடுகள் யாழ்ப்பாணப் பேச்சுமொழியின் உயிர்த்துவத்தை அற்றுச்செய்துவிடுகின்றன. இப்பிரச்சினையை ஒரே எடுத்துக்காட்டையே பேச்சு வழக்கிலும், எழுத்துவழக்கிலும் கொடுப்பதன் மூலம் தீர்த்துக்கொள்ளலாம்.

இறுதியாக, சாதி சம்பந்தமான சொற்களை ஆழமான சிந்தனை, ஆய்வுகள், விவாதங்களின் பின்னர் தனது அகராதியில் தவிர்த்திருப்பதாக சிறிரஞ்சன் கூறுகின்றார். இத்தகைய சொற்களைச் சேர்ப்பதா, இல்லையா என்பது மிகச்சிக்கலான விடயமே. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதிப் பதிப்பாளராக விளங்கிய வையாபுரிபிள்ளை அவர்களுக்கு சாதி தொடர்பான சில பதிவுகள் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியிருந்தமையைத் தனது அகராதி நினைவுகள் எனும் நூலிற் கூறியுள்ளார். அவர் குறிப்பிடுள்ள இரு உதாரணங்களைப் பார்க்கலாம். முதலாவது 'சான்றார்' என்ற சொல். இதற்கு இரு விதமான கருத்துகள் உண்டு. அறிவொழுக்கங்களால் நிறைந்த பெரியவர்கள், சங்க காலப் புலவர்கள், வீரர்கள் என்போர் சான்றார் அல்லது சான்றோர் எனப்பட்டனர். அதேசமயம் சான்றார் என்பது கள் இறக்கும் தொழில் புரிவோரையும் குறிக்கும். எனவே, குமரகுருபரர் 'சான்று' என்பதற்கு 'கள்' எனும் பொருளுண்டு என்று கருதி இயற்றிய பாடலொன்றின் அடிப்படையில் 'சான்று' என்பதற்கு 'மது' எனும் பொருளும் உண்டு என்று அகராதியிற் பதிவிடப்பட்டது. 'குறிப்பிட்ட ஒரு சாதியாரை இப்பொருள் இழித்துக் கூறுகிறது என்று புகார் வந்தது. இது எளிதில் அடங்குவதாயில்லை. ஜாதிச் சச்சரவு இதனால் ஏற்படும் அளவுக்குக் காரியம் முற்றி விட்டது. இறுதியில் இப்பொருள் நீக்கப்பட்டது.' என்கிறார் வையாபுரிப்பிள்ளை. அதே சமயம் அக்கிரகாரம் என்பதற்கு பார்ப்பனச்சேரி என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி விளக்கம் கொடுத்துள்ளது. 'இடைச்சேரி என்று சொல்லாம் ஆனால் பார்ப்பனச்சேரி என்று சொல்லலாமா?' என்று பிராமணர்கள் விவாதித்தார்கள் என்றும் இதற்கு முன்னோர் ஆட்சி உளதென அறிந்தும் (சமண சமயத்தவரான மயிலை நாதர் நன்னூலுக்கு எழுதிய உரையில் இச் சொல்லாட்சி காணப்படுகின்றது), முன்னோராட்சிக்கு அகராதியாளர் பொறுப்பல்லர் என்று பகுத்துணர்ந்தும் அவர்கள் அமைதியுற்றனர் என்று வையாபுரிப்பிள்ளை கூறுகின்றார். எனவே சாதி தொடர்பான சொற்களைச் சேர்த்துக்கொள்வதில் சமூகப் பிரச்சினைகள் உள எனினும், புலமைசார் முயற்சிகளில் இத்தகைய தவிர்ப்புகள் ஏற்புடையனவா என்பது வாதத்திற்குரியது. பேராசிரியர் சுசீந்திரராஜா சாதிக்கும் மொழிக்குமுரிய தொடர்புகள் குறித்து ஆராய்ந்துள்ளமையும், சமூக விஞ்ஞான புலமையாளர்கள் யாழ்ப்பாணச் சாதி முறைமை குறித்த ஆய்வுகளைத் தற்பொழுதும் மேற்கொண்டு வருவதையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

மேலும், விவசாயச் சொற்கள் காணப்படுமளவுக்கு ஏனைய தொழில்முறைச் சொற்களும் இவ்வகராதிகளிற் காணப்படுகின்றனவா என்பதும் ஆய்வுக்குரியது. சாதிக்கும் தொழிலுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. மேனோக்கிய அசைவியக்கம், எந்திரமயப்படுத்தப்படல் முதலானவை காரணமாகத் தொழில்களுடன் தொடர்புடைய சொற்கள் விரைவில் அருகி வருபவை. எனவே சாதியுடன் தொடர்புடைய தொழில்முறைச் சொற்கள் யாவற்றையும் எவ்வாறு ஆவணப்படுத்துவது என்பது சிந்தனைக்குரியது.

பேச்சுமொழி வழக்காறுகள் படைப்பிலக்கியத்துள் பரவலாக இடம் பெறுவதால் சிறுகதைகள், நாவல்கள் என்பனவும் பேச்சுமொழி அகராதியாளரின் கவனத்திற்கு வரவேண்டியவை. விசேடமாக, கே. டானியலின் நாவல்களில் யாழ்ப்பாண மொழி உயிரோட்டத்துடன் காணப்படுகிறது. எனவே, உதாரண வாக்கியங்களை இத்தகைய படைப்பிலக்கியப் பேச்சுமொழி உரையாடல்களிலிருந்து கொடுப்பது குறித்தும் அகராதியாளர் சிந்திக்கலாம்.

மேலும், புழக்கத்தில் உள்ள சில சொற்கள் இவ்வகராதிகளில் இடம் பெறாமல் உள்ளன. எடுத்துக்காட்டாக, குமர், குமர்ப்பிள்ளை, தாவணி, ஆக்கினை, பாறணை, தட்டத்தனியன் முதலானவற்றைக் குறிப்பிடலாம். பேச்சுமொழி மக்களுக்குரியது. எனவே, அகராதியாளருக்கு விடுபட்ட சொற்களைக் கொடுத்துதவுதல் மக்கள் கடமை.

இறுதியாக, வையாபுரிப்பிள்ளை அவர்கள் நவீன ஆங்கில அகராதி செம்மையுறுவதற்கு மூன்று நான்கு தலைமுறைகளாக ஆங்கில உலகம் உதவி செய்து வந்தது என்று குறிப்பிடுவதிலிருந்து, ஒரே தடவையில் செம்மையான அகராதி படைத்தல் அசாத்தியம் என்பது புலனாகின்றது. அதே சமயம் க. இரகுபரன் யாழ்ப்பாண வழக்குச்சொல் அகராதிக்கு அளித்த அணிந்துரையில் கூறியது போன்று, அகராதிப் பணிக்கு ஆதி உண்டு அந்தம் இல்லை என்பதும் மனங்கொள்ளப்பட வேண்டியதொன்று. இலக்கிய வாசகர்களுக்கும், மொழியியலாளர்களுக்கும், மானிடவியல், சமூக விஞ்ஞானத் துறைப் புலமையாளர்களுக்கும் சிறிரஞ்சனின் அகராதிகள் பெரும் வரப்பிரசாதம் என்பதில் ஐயமில்லை. 'இலங்கைத் தமிழின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் பேரகராதி' என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் பத்மநாதனால் விதந்துரைக்கப்படும் யாழ்பாணத் தமிழ் அகராதியையும், யாழ்ப்பாண வழக்குச் சொல்லகராதியையும் உருவாக்கிய ஸ்ரீரஞ்சனுக்குத் தமிழுலகம் கடப்பாடுடையது.

எமது உறவுகளைத் தேடுவது தேசவிரோதமா?

மட்டக்களப்பில் காணாமலாக்கப்பட்ட உறவுகள் கேள்வி

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த கவனவீர்ப்பு போராட்டம் நேற்று (வியாழக்கிழமை) மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது.

மனித உரிமைகள் மதிக்கப்படாத நாட்டிலிருந்து ஆயிரம் நாள்களுக்கு மேலாக நீதி கோரி போராடும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் என்ற தொனிப்பொருளில் இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை மட்டக்களப்பில் போராட்டம் நடத்துவதற்கு மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்துக்கு வருகை தந்த தாய்மாரை அங்கிருந்து செல்லுமாறு பொலிஸார் அச்சுறுத்தல் விடுத்த நிலையிலும் அதனையும் தாண்டி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள தந்தை செல்வா நினைவுப்பூங்கா முன்பாக ஒன்றுகூடிய காணாமல்போனவர்களின் உறவினர்கள் இந்த கவனவீர்ப்பு ப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

காணாமல்போன தங்களின் உறவுகளின் புகைப்படங்களையும் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியவாறு இந்த போராட்டத்தில் உறவினர்கள் ஈடுபட்டனர்.

'எமது உறவுகளை மலினப்படுத்தாதே, எம் கண்முன்னே இழுத்துச்செல்லப்பட்ட எமது உறவுகள் எங்கே, சர்வதேசமே மனித உரிமைகள் பேச்சளவில்தானா?, நீதி கேட்கும் நாங்கள் அப்பாவிகள் எங்களை ஏன் தீவிரவாதிகளாகப் பார்க்கின்றீர்கள்?, எமது உறவுகளை தேடுவது தேசவிரோதமா?, மனித உரிமைகள் எமக்கு இல்லையா? - போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது கொரனா அச்சுறுத்தல் நிலவும் காலம் என்ற காரணத்தால் மட்டுப்படுத்தப்பட்டவர்கள் கலந்துகொண்டு சுகாதார நெறிமுறைகளைப் பின்பற்றியவாறு இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.சிவயோகநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ், மட்டக்களப்பு மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஏ.தேவதாசன் அடிகளார் உட்பட அருட்தந்தையர்கள், காணாமல்போனவர்களின் உறவினர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது 'சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் காணாமல்போன தமது உறவுகளை கண்டறிவதற்கான நிலையை இழந்து நிற்பதாக' என்னும் தலைப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்துக்கு அனுப்பிவைப்பதற்கான மகஜர் ஒன்றும் வாசிக்கப்பட்டு ஆணையகத்துக்கு அனுப்பிவைப்பதற்காக மட்டக்களப்பு மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஏ.தேவதாசன் அடிகளாரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் நீண்டகாலமாக தாங்கள் தமது உறவுகளை தேடி பல போராட்டங்களை நடாத்திவருகின்ற போதிலும் தமது குரல்வளைகளை நசுக்கும் செயற்பாடுகளே இந்த நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் தமக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன எனவும் இதன்போது தெரிவித்தனர்.

நாங்கள் இந்த அரசாங்கத்திடம் சொத்து சுகம் கோரவில்லை, உங்களால் வலுக்கட்டாயமாக கொண்டுசெல்லப்பட்ட எங்கள் உறவுகளையே கேட்கின்றோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

எங்களுக்கு இந்த நாட்டில் நீதி கிடைக்கும் என்று நம்பவில்லை. இந்த நாட்டில் எங்களது உறவுகளைத் தேடி எங்களுக்கான நியாயத்தைப்பெற்றுக்கொடுக்க சர்வதேச சமூகம் தலையிடவேண்டும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் எமக்கான தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் எனவும் இதன்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மறைக்கப்பட்ட மனிதர்கள் எங்கே? மன்னாரில் அமைதி ஊர்வலம்!

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று (வியாழக்கிழமை) மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது உறவுகளைக் கண்டு பிடித்துத் தரக்கோரி அமைதி ஊர்வலம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் இந்த அமைதி ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த அமைதி ஊர்வலம் நேற்று காலை 10.30 மணியளவில் மன்னார் ரெலிகொம் சந்தியில் ஆரம்பமாகி மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஊடாக மன்னார் பஸார் பகுதியைச் சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து மன்னார் புதிய பஸ் நிலையத்துக்கு முன் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் புகைப்படங்கள் மற்றும் பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 'மறைக்கப்பட்ட மனிதர்கள் எங்கே'?, இராணுவத்திடம் ஒப்டைக்கப்பட்ட உறவுகள் எங்கே உள்ளிட்ட வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியாவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ்.திலீபன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பேசவேண்டிய இடங்களில் மட்டும் தமிழ் எம்.பிக்கள் பேசவேண்டும்!

காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் கோரிக்கை

தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் பேச வேண்டிய இடங்களில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசவேண்டும் என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கலாரஞ்சினி தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று (வியாழக்கிழமை) கிளிநொச்சியில் அமைந்துள்ள மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்துக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தாங்கள் தங்களுடைய உரிமை பற்றியும், காணாமல்போனவர்களுடைய நிலைமை பற்றியும் அறிவதற்காக நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்து அனுப்பிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் இதுபற்றி எதுவும் பேசாமல் இருக்கின்றார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதியை பெற்றுத்தர சர்வதேசத்தில் வாழும் உறவுகள் ஒன்றிணைந்து முன்வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் பேச வேண்டிய இடங்களில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் பின்னணி கண்டறியப்படல் வேண்டும்

வாசுதேவ சபையில் வலியுறுத்தல்

எம்.சி.சி. உடன்படிக்கையும், அதனை விரைவாகக் கைச்சாத்திட வேண்டும் என்ற அவசரமும், அதற்கான தேவையின் பின்னணியின் காரணி எதுவாக இருக்க முடியும் என ஆராய்ந்தால் ஈஸ்டர் தாக்குதல் ஏன் இடம்பெற்றது எனவும், சூத்திரதாரி யார் எனவும் கண்டறிய முடியும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சபையில் தெரிவித்தார். இதனுடன் தொடர்புபட்ட நபர்கள் இன்று நாடாளுமன்றத்தில் இல்லை எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணி என்னவென எதிர்க்கட்சியினர் சபையில் கேள்வி எழுப்புகின்றனர். இதன் பின்னணி தெரிந்துகொள்ளப்பட வேண்டும் என்றால், என்ன சூழ்ச்சி என அறிந்துகொள்ள வேண்டும் என்றால். எம்.சி.சி உடன்படிக்கையும், அதனை விரைவாகக் கைச்சாத்திட வேண்டும் என்ற அவசரமும், அதற்கான தேவையின் பின்னணியும் எதுவாக இருக்க முடியும் என சிந்தித்துப் பார்த்தால் இந்த தாக்குதலின் பின்னணி என்னவெனக் கண்டறிய முடியும். இதன் பிரதான சூத்திரதாரி யார் என்பதைக் கண்டறிய முடியும். நான் கூறுகின்றமை மறைமுகமான கருத்தாக இருக்கலாம் .ஆனால் நான் இவற்றைக் கூற வரும் நபர் இந்த சபையில் இல்லை, ஆனால் நீதிமன்றத்தில் சந்திக்க முடியும்.

இந்தத் தாக்குதலின் பின்னர் நாட்டில் நடக்கவிருந்த கலவரத்தைக் கர்தினால் அவர்களே தடுத்து நிறுத்தினர். அதற்காக நாம் கர்தினாலுக்கு நன்றிகளைத் தெரிவிக்க வேண்டும்.

ஆனால் அந்த வேளையிலும் ஹரின் போன்றவர்கள் அவதூறுக் கருத்துக்களை முன்வைத்தனர். குளியாப்பிட்டிய, மினுவாங்கொடையில் ஒரு கலவரம் இடம்பெற்றது.

குற்றவாளிகளைப் பொலிஸார் கைதுசெய்தனர். உடனடியாக அந்த இடத்துக்குச் சென்ற அப்போதைய ஆளும் கட்சியின் நபர்கள் குற்றவாளிகளை விடுவித்தனர். இதுவும் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற என்ன காரணம், யார் காரணம் என்பதற்கு நல்லதொரு சாட்சியாகும். எனவே இவற்றைக் கண்டறிந்தால் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதைக் கண்டறிய முடியும்.– என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

கனேடிய அரசாங்கத்துக்கு புலம்பெயர் அமைப்பு கடிதம்

கொழும்பு, டிசெ.11

போர்க்குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய இலங்கை தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலார் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்ட 18 பேருக்கு கனடாவிற்குள் பிரவேசிப்பதற்கு கனடிய அரசு தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

'த அலையன்ஸ் கிரியேட்டிவ் கம்யூனிட்டி ப்ராஜெக்ட்' என்ற அமைப்பு கனடிய வெளிவிவகார அமைச்சர் பிரன்சுவா பிலிப் சம்பேனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் -

மேஜர் ஜெனரல் சத்தியபிரியா லியானகே, மேஜர் ஜெனரல் மஹிந்தா ஹதுருசிங்க, மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சி, மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், மேஜர் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய, கேர்ணல் ஜி.வி. ரவிப்ரியா, பிரிகேடியர் பிரசன்னா சில்வா, பிரிகேடியர் நந்தன உடவத்த, பிரிகேடியர் ஷாகி கலேஜ், அட்மிரல் வசந்த குமார ஜெயதேவா கரன்னகொட, அட்மிரல் திசாரா எஸ்.ஜி.சமரசிங்க, அட்மிரல் டி.டபிள்யூ.ஏ.எஸ்.திசானநாயக்க, சி.என். வகீஷ்டா ஆகியோரின் பெயர்களும் காணப்படுகின்றன.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் இளவரசர் செயிட்ஹூசைனின் அறிக்கை மற்றும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரோன் ஆகியோரது இலங்கை அரசு மீதான சர்வதேச சுதந்திர விசாரணைக்கான முன்முயற்சி வலியுறுத்தலைத் தொடர்ந்து கனேடிய அரசும் இவர்கள் மேல் முதற்கட்டமாகத் தடைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சூழ உயர்பதவிகளில் இந்த படை அதிகாரிகள் இருக்கின்றனர். இலங்கை அரசாங்கம் 30/1 தீர்மானத்திலிருந்து பின்வாங்கியுள்ளதோடு சர்வதேச ஒப்பந்தங்களை மதிக்காத போக்கில் செயற்படுகின்றது. இவ்வாறான நிலையில் குற்றவாளிகளின் சுதந்திரமான நடமாட்டத்தைத் தவிர்க்கும் வகையிலும் சொத்து முடக்கம், நிதி மற்றும் பயணத்தடை ஆகியவற்றையும் விதிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

கனடாவில் 2017 இல் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு ஊழல் அதிகாரிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் சட்டங்களின் அடிப்படையிலும், மனிதத்துக்கு எதிரான குற்ற மற்றும் போர் குற்ற சட்டத்திற்கு அமைவான குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரமும் பயணங்களுக்கான மட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அதிகாரத்தை வழங்கி யுள்ளது என்றும் அதில் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை அரசாங்கத்தின் போர் குற்றவாளிகளை ரோம் சட்டத்தின் அடிப்படையில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றிற்கு பரிந்துரைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதோடு, கனேடிய அரசு தலையிட்டு கடந்த பதினொரு ஆண்டுகளாகத் தமது உறவுகளைத் தேடிக்கொண் டிருப்பவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

கனடா மனித உரிமைகளை மதிக்கும், உலக அமைதிக்காக குரல் கொடுக்கும் நாடு என்ற வகையில், தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்காக கனேடிய அரசு இந்த விடயத்தில் தலையீடுகளைச் செய்து உலகத்திற்கே முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

4SIGHT OPTICALS
08B 1ம் மாடி
கார்கில்ஸ் சதுக்கம்
யாழ்ப்பாணம்.
அனைத்து விதமான
மூக்குக் கண்ணாடிகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.
021 222 3038 / 077 700 2411

farmo
Gift Hampers
Rs. 6,500/=
Rs. 10,000/=
Rs. 15,000/=
MERRY Christmas
அன்பை பகிருங்கள்;
உங்கள் பிரியமானவர்களிடம்.
@ www.farmo.lk | Hotline - 0777 11 33 33

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
EXPRESS Courier Services
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
யாழ்ப்பாணம் கிளிநொச்சி வவுனியா
சங்கானை முல்லைத்தீவு மல்லாவி
கல்வியங்காடு புதுக்குடியிருப்பு மன்னார்
ஆவரங்கால் கனகராயன்குளம் கொழும்பு
நெல்லியடி சங்கத்தானை பளை
லண்டன் 1050/=
பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம்
ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
Whatsapp No - 076 1221566

கல்யாணமாலை
வட சர்வதேச
திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1987.11.13
மதம் - இந்து V
நட்சத்திரம் - ஆயிலியம்
செவ் - 08இல்
பாவம் - 20
கல்வி - MBBS
தொழில் - MBBS Doctor
எதிர்பார்ப்பு - Doctor OR Engineer

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1990.12.21
மதம் - இந்து V
நட்சத்திரம் - திருவோணம்
பாவம் - 19 1/4
சூ/ செவ் - 4இல்
கல்வி - CIMA
தொழில் - கணக்காளர்
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.12.2020 இல் வெளியிடப்பெற்றது.